
ஓம் சாயி ராம்





# சாயி மார்க்கம்

## அவதார சிறப்பு மலர்

இலங்கை ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனம்

காலாண்டு இதழ்

ஒக்டோபர் – டிசம்பர் 2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயி மார்க்கம்

# Sai Markam


| மலர்:11<br>இதழ் :32 | ஒரே ஒரு மதம்<br>அது அன்பு எனும் மதம் | ஒக்டோபர் - டிசெம்பர்<br>2004 |
|---|---|---|


## பொருளடக்கம்


1. கலியுக அவதார் 01
2. பகவானின் வருகை பற்றிய தீர்க்கதரிசனங்கள் 04
3. ஓர் அவதாரின் (பகவானின்) சிறப்பம்சங்கள் 12
4. சுவாமியின் பிரகடனங்கள் 14
5. அவதார நோக்கம் 19
6. எம்மை மகிழ வைக்கும் சாயி சேவை 22
7. வடபிராந்திய இணைப்புக் குழுவின் குறிப்பு 24
8. இறைவனை நோக்கிய என் பயணம் 26
9. சுவாமியைத் தரிசித்த இராக்கியத் (Iraq) தம்பதிகள் 32
10. சத்தியசாயி சேவா நிறுவனச் செய்திகள் 33



| | | |
|---|---|---|
| இலங்கையில் தனிப்பிரதி | ரூபா 30/- | (சந்தா அனுப்பும் முகவரி: ஆசிரியருக்கு) |
| வருட சந்தா ( 4 பிரதிகள்) | ரூபா 120/- | காசோலை: Sathya Sai Seva Org(NZ)<br>A/No. 4023<br>HNB, Jaffna. |
| வெளிநாடு வருட சந்தா | U.S டொலர் 10 | |



ஆசிரியர்: வைத்திய கலாநிதி இ.கணேசமூர்த்தி

தொ.பே: 222 2832 / 222 5580

659 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

துணை ஆசிரியர்: திரு. V.K.சபாரத்தினம்

தொ.பேசி:077 6106262

திரு. S.R.சரவணபவன்

தொலை.பே: 222 5442



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலியுக அவதார்

ஆன்மாக்கள் மீதுள்ள அன்பின் நிமித்தம், பரமாத்மா மனித உருவம் எடுக்கச் சங்கல்பித்தது. இதன் பயனாக, 23ஆம் திகதி நவம்பர்மாதம் 1926ஆம் ஆண்டு, ஈஸ்வரம்மாவுக்கும் பெட்ட வெங்கப்பராஜு வுக்கும், சத்திய நாராயணண் என்ற பெயருடன், இந்தியாவிலுள்ள ஆந்திரப்பிரதேசத்தில் புட்டபர்த்தி என்ற கிராமத்தில் பரமாத்மா அவதரித்தார். வீட்டிலுள்ள இசைக்கருவிகள் தாமாகவே இசை மீட்டு அவதாரின் வருகையை வெளிப்படுத்தின. பள்ளிப் பருவத்தில் பல அற்புதங்களை சகமாணவர்கள் மத்தியில் செய்து அவர்களை மகிழ்வித்தார். பள்ளிக்காலத்தில் இவரின் தெய்வீகத்தை அறிந்தவர்கள் மிகவும் சிலரேயாவர். பெற்றோர் சகோதரங்களுக்கே விளங்க முடியவில்லை.

1940ஆம் ஆண்டு மே மாதம் 23ஆம் திகதியன்று, சத்தியநாரயணண், "நான் சாயிபாபா" என்று பிரகடனம் செய்தார். "மனதைத் தூய்மைப் படுத்துங்கள், வீடுகளைச் சுத்தமாக வைத்திருங்கள், வியாழக்கிழமைகளில் என்னை வணங்குங்கள்" என்று அன்று கூடியிருந்தவர்களுக்குக் கூறினார்.

1940ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20ஆம் திகதியன்று பள்ளிப் புத்தகங்களை கீழே போட்டு விட்டு, இனத்தவர்களின் பாசத்தை நீக்கி, தனது தெய்வீகப் பணியை ஆரம்பிப்பதற்காக, வீட்டை விட்டு வெளியேறினார். அன்றுதான், "மானச பஜரே குரு சரணம் ........" என்ற பஜனைப் பாடலைக் கூடியிருந்தவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தார்.

1944ஆம் ஆண்டு (பழைய மந்திர் கட்டும்) வரை, கர்ணம் சுப்பம்மா வீட்டிலேயே தங்கியிருந்து தனது பணியைச் செய்தார். தற்போதைய "பிரசாந்தி நிலையம்" 1950ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23ஆம் திகதி திறக்கப்பட்டதும், அன்று தொடங்கி, அங்கேயேயிருந்து, பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா தனது பணியை ஆற்றி வருகிறார். இப்போது அநேகமாக பிரசாந்தி நிலையத்திலும் கோடைக்காலத்தில், பங்களூரிலுள்ள 'வைற் வீல்ட்' டிலும் தங்குவார்.

முதற் 16 வருடங்களில் லீலைகளும், அடுத்த 16 வருடங்களில் மகிமை, அற்புதங்களும், பின்னைய வருடங்களில் உபதேசமும் முக்கிய இடம் பெறுமென்று பகவான் கூறியதை, பேராசிரியர் கஸ்தூரி, 'சத்தியம் சிவம் சுந்தரம்' என்ற நூலில் குறித்துள்ளார். சுவாமியின் இளமைப் பருவ லீலைகளை, மேற்கூறிய புத்தகத்திலும், 'அன்னியதா சரணம் நாஸ்தி' என்ற புத்தகமூலமும் அறியலாம். சுவாமியின் பிரம்மாண்ட மான சேவைப் பணிகள் வேறாக இவ்விதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

**பகவானின் முக்கிய நோக்கம், மனிதனில் உள்ளுறையும் தெய்வீகத்தை வெளிப்படுத்துவ தேயாகும்.** இதற்கு மனிதன்தான் முதல் அடியை எடுத்து வைக்க வேண்டுமென்றும், எடுத்தால் தான் பத்து அடி முன் வைப்பேன் என்றும் பகவான் கூறியுள்ளார். இதைத்தான் மாணிக்கவாசகரும் "சிவன் அவன் என் சிந்தையில் நின்ற அதனால், அவன் அருளாலே அவன் தாழ் வணங்கி.........." என்று பாடியுள்ளார். தெய்வீகத்தை வெளிப்படுத்துவ தென்றால், மனிதனில் உன்னத மனமாற்றம் ஏற்பட்டு, அளவிலா அன்பை எப்பொழுதும், எதிலும், சிந்தனை சொல் செயலில் வெளிப்படுத்துவதேயாகும். தெய்வீக அன்பின் வெளிப்பாடே சத்தியம், தர்மம், சாந்தி அகிம்சை என்ற அடிப்படை மனிதமேம்பாடுகளாகும். அன்பு என்ற மகாசக்தி வெளிப்படுவதற்குத் தடையாயிருப்பது, உடற்பற்றில் ஊறியிருக்கும் மனமேயாகும். இதன் வெளிப்பாடே காமம், குரோதம், மோகம், லோபம், மதம், பொறாமையாகிய ஆறு தீய குணங்களாகும். இவற்றைப் போக்கடிக்க, இடையிடாத நாமஸ்மரணம், இதனுடன் இணைந்த மானிட சேவையும் அவசியமென்று பகவான் கூறியுள்ளார். மேலும், அவர் தனி மனிதமாற்றத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமே, குடும்பம் சமூகம், உலகமாற்றத்தை ஏற்படுத்தலா மென்றும் கூறியுள்ளார்.

பகவான் மனித உருவத்தில் எம் மத்தியில் நடமாடுவதையும், எம்மைப்போல் உரையாடுவதையும், வயோதிபம் வியாதிக்குட்படுவதையும் பார்த்துப் பலர் இவர் கடவுளா? ஞானியா? சித்தரா? ஒரு உன்னத மனிதனா என்று ஐயப்படுகிறார்கள். பகவான் மனித உருவில் நடமாடும் பரபிரம்மன் என்பதை உணர்வதற்கு, அவரை அணுகிப் பரிசோதித்து, அவரின் அன்பை அனுபவிக்க வேண்டும். அணுகாமல் ஒரு முடிவுக்கும் வரமுடியாது. சில பாக்கியசாலிகள், சுவாமியைப் பற்றிக் கேள்விப்பட்டவுடனேயே, அல்லது படத்தையோ, உருவத்தையோ பார்த்தவுடனேயே சுவாமி அவதாரம் என்பதை ஏற்றுக் கொண்டுவிடு கிறார்கள். பல ஆன்மீக மகான்கள் சுவாமி அவதாரம் என்பதை உணரமுடியாது, ஏதோ சித்தர், சித்த விளையாட்டுக்களைக் காட்டுகின்றார் என்றே விளங்கிக் கொள்கிறார்கள். இது வியப்பாயிருந் தாலும் இதுவும் சுவாமியின் சங்கல்பமேயாகும். இன்னும் சிலர் சுவாமி ஒரு மாந்திரீகனென்றே நினைத்துக் கொள்கிறார்கள். பல தீவிர சமயவாதிகளுக்குச் சமயநூல்களில் அவதாரத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தாலும், நம்ப முடிவதில்லை. பல விஞ்ஞான அறிவாளிகளுக்கும், ஆன்மீகத்தைப் பற்றிய விளக்கங்கொள்ள ஆர்வமுமில்லை, அத்துடன் இயற்கை விதிகளுக்கப்பால் நடப்பவையெல்லாம் ஏமாற்று வித்தைகளேயென்ற தப்பபிப்பிராயத்தையே கொண்டுள்ளார்கள்.

பகவான் தனது அடியவர்களுக்கு, தனது எங்கும் வியாபித்திருக்கும் தன்மையையும், எல்லாம் அறிந்தவரென்பதையும், எல்லாம் வல்லவரென் பதையும், நேரிலும், கனவிலும், சூட்சும உடம்பாலும், மறைமுகமாக விபூதி, சந்தனம், குங்குமம், தேன் படங்களிலிருந்து சொரிவதன் மூலமும், பிரார்த்தனையின் போது படத்திலிருக்கும் மலர்களை வீழ்த்தியும் காட்டிக் கொண்டிருக்கிறார். ''பிரசாந்தி நிலையத்திற்கு'' ஒரு விளம்பரமோ, அல்லது அழைப்போ இல்லாது, உலகிலுள்ள பல திசைகளி லிருக்கும் சகல நாடுகளிலிருந்து பக்தர்கள் படையெடுத்தவண்ணமே உள்ளார்கள். இவ்வற் புதத்தை நேரில் பார்த்தால் சுவாமியின் அன்பு சக்தியை ஓரளவு விளங்கிக்கொள்ளலாம்.

சுவாமி, தனது முழுத்தன்மையை ஒருவராலும், பல பிறப்புகள் எடுத்தாலும் புரியமுடியாதென்பதால், இப்போது கிடைத்த பாக்கியத்தை, சந்தர்ப்பத்தை முழுமையாகப் பயன்படுத்தவேண்டுமென்று அறிவித்துள்ளார். தன்னை ஏற்றுக் கொள்பவர்கள், தனது மர்மத்தையும், ஊகத்திற்கப்பாற் பட்ட தன்மையையும், முரண்பாடுபோலத் தோன்றும் கூற்றுக்களையும் ஆனந்தமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அறிவித்துள்ளார்.

பகவான் தான் செய்யும் அற்புதங்கள் தனது தெய்வீகத் தன்மையை வெளிப்படுத்தும் அறிமுகச் சீட்டுக்களேயென்றும், அற்புதங்கள் புரிவது தனது இயல்பேயென்றும், தவத்தினால் கிடைத்தல்ல வென்றும், கூறியுள்ளார். சித்தர்கள் தவத்தின் பயனாகச் சித்திகளைப் பெறுகிறார்கள். சித்தர்கள் தமக்குக் கிடைத்த இச்சக்தியைப் பிழையாகப் பாவித்தால் ஆன்மிகப் பாதையிலிருந்து சறுக்கிவிழும் ஆபத்தை நோக்கவேண்டியேற்படும். அவதாரத்திற் கோ சித்திகள் அவரின் இயற்கை இயல்பு. ஆகவே அவருக்கு இதனால் ஒரு ஆபத்தும் ஏற்படாது. தனது அற்புதங்களை நேரில் காணாதோர் மாந்தீரிகம் என்று அலட்டிக் கொள்கிறார்கள் என்றும், மந்திரவாதி தனது பிழைப்பிற்காக, புகழுக்காக, பெயருக்காக மந்திரஜால வித்தைகளைச் செய்கிறான் என்றும், தனக்கு அப்படியொரு தேவையு மில்லையென்றும் கூறியுள்ளார். ''சிலர் தம்மைத் திறமையான தர்க்க அறிவாளிகள் (Rationalists) என்று கூறிக்கொண்டு எனக்குச் சவால் விடுகிறார்கள். சவால் விடுவதும், சவாலை ஏற்றுக்கொள்வதும் ஆணவத்தின் (Ego) செருக்கேயாகும். ஒரு பன்றியுடன் யாராவது. மலம் உண்ணும் போட்டியில் வெல்லலாமா? அல்லது போட்டிக்குப் போகலாமா? அதேபோல எனக்கோ ஆணவம் என்பதே கிடையாது. ஆணவத்தின் செயற்பாட்டில் விடும் சவால்களை நான் கணக்கெடுப்பதில்லை'' என்று பகவான்கூறியுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதாரம் தன்னிடம் எவ்வளவு சக்தியிருந்தாலும், அதைத் தன்னலத்திற்கு ஒருபோதும் உபயோகிப்பதில்லை. தனது உடம்பிற்கு ஏற்படும் காயத்தையோ அல்லது வியாதியையோ பொருட்படுத்துவதில்லை. அவர் தேகாபிமானம் இன்றி ஆத்மாபிமானத்திலேயே நிலைத்திருப்பவர். தன்னைத் திட்டுபவர்களைக் கூட நிந்திப்பதில்லை. இதுதான் நிபந்தனையற்ற, தொடர்ச்சியான அன்பென்னும் மகாசக்தி.

அவதாரத்திற்குச் சீடர்களில்லை. இருப்பவர்கள் எல்லாம் பக்தர்களே. அவதாரம், இடையாட்களில்லாது நேரடியாகப் பக்தர்களுடன் தொடர்புகொள்வார்.

அவதாரின் பிறப்பு கர்மவினையினாலோ, உடற்புணர்ச்சியாலோ ஏற்பட்டதில்லையென்றும், பிரசவமில்லை, பிரவேசமேயென்றும் அவதார் கூற, அவரின் தெய்வீகத்தாயும் உறுதிப்படுத்தியுள்ளார்.

அவதார் ஒருவரையும் பலவந்தமாகத் தன் வழிக்கு இழுப்பதில்லை. எத்தனையோ பேர், அவரின் தரிசனத்தாலும், ஸ்பர்சனத்தாலும், சம்பாஷணையாலும், அவரின் பார்வையாலும், போதனைகளைக் கேட்டும், வாசித்தும் உன்னத மனமாற்றம் அடைந்துள்ளார்கள். இவர்களில், மகாராஜாக்கள், பலநாட்டின் தலைவர்கள், தொழிலதிபர்கள், விஞ்ஞானிகள், செல்வந்தர்கள், பசி பிணியால் பீடிக்கப்பட்டவர்கள், கொடூரமானவர்கள், ஆன்மீகச் சாதகர்கள் அடங்குவர். எமக்குக் கிடைத்த ஆசீர்வாதங்களாவன; பகவானின் நாமம், உருவம், போதனை, சேவா நிறுவனம், கல்வித்திட்டம், கல்விக்கூடங்கள், வேறு பல பாரிய சேவைத்திட்டங்கள் ஆகியவையாகும்.

பகவான், இடைவிடாத நாமஸ்மரணையே கலியுகத்தில் உகந்த சாதனையென்று கூறியுள்ளார். ஏதோ நமக்குப் பிரியமான கடவுளின் திருநாமத்தை எமது சுவாசத்துடன், அல்லது இதயத்துடிப்புடன் ஒருங்கிணைக்கவேண்டும்.

அவதார் எம்முடன் எம் கண்முன்னே நடமாடித் திரியும் சந்தர்ப்பத்தை நாம் நழுவவிடக்கூடாது. அவரின் திருப்பாதங்களைக் கைப்பற்றி போதனைகளை வாழ்க்கையில் பின்பற்றி, ஆன்மீகத்தில் முன்னேறவேண்டுமென்பதே எமது பிரார்த்தனை.

**ஆசிரியர்**

"ஜெய் சாயி ராம்"

> "கடவுள் எல்லாவற்றையும் படைத்துவிட்டு, அவற்றை அனுபவிப்பதற்கான முழு சுதந்திரத்தையும் மனிதனுக்கு வழங்கியுள்ளார். ஆனால் அதில் ஒரு நிபந்தனை. நீ எதையாவது செய்யலாம். எதையாவது அனுபவிக்கலாம். ஆனால் அதன் பலனிலிருந்து தப்பமுடியாது. நீ புரிந்த செயல்களுக்கு நீயே பொறுப்பு. நன்மை, தீமை இரண்டும் நீயே செய்தவை. கடவுளிடம் பக்தி கொள்வதாலும், கடவுளின் அருளாலும் உனது விதியின் வலிமை குறைகின்றது"
>
> -ஸ்ரீ சத்திய சாயி பாபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவானின் வருகை பற்றிய தீர்க்கதரிசனங்கள்

> "பரித்ராணாய ஸாதூனாம் வினாசாய ச துஷ்க்ருதாம் !
> தர்மஸம்ஸ்த்தாபனார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே !!"
> கீதை IV - 8

"நல்லவர்களை, சாது ஜனங்களைக் காப்பாற்றி பாதுகாப்பதற்காகவும், கெட்டவர்களையும், கெட்டநடத்தை கொண்டவர்களையும் அடக்கி ஒழிப்பதற்காகவும் தர்மத்தை நன்கு ஸ்தாபனம் செய்வதற்கும் நான் யுகம் தோறும் அவதரிக்கிறேன்" என்று கீதையில் கிருஷ்ணபகவான் உறுதியளித்தபடி இறைவன் காலத்திற்குக் காலம் அவதரித்துக் கொண்டு வருகிறார். ஆனால் அவதாரங்கள் நிகழ்ந்தபோதெல்லாம் அதைப்பூரணமாக உணராமல், சாதாரண மனிதராகவே பார்த்துத் தங்கள் அரிய சந்தர்ப்பங்களை இழந்த வரலாற்றை நாம் பார்த்துள்ளோம். யேசுநாதர் அவதரித்தபோது, அவரில் நம்பிக்கை கொள்ளாது, அவரைச் சிலுவையில் அறைய நேர்ந்தது. முகம்மது நபி அவர்கள் அவதரித்தபோது அவரை மெக்காவில் இருந்து மெடினாவுக்கு ஓட ஓட விரட்டினார்கள். புத்தர் அவதரித்த போது அவருக்கு நஞ்சூட்டி கொலைசெய்ததாக வரலாறு உண்டு. இதேபோல இராமர் அவதரித்த போது சாதாரண மானிட வடிவிலேயே மக்கள் அவரைப் பார்த்தனர். வசிஷ்டர், விஸ்வாமித்திரர் போன்ற ரிஷிகளே இராமர் ஒரு அவதாரம் என்பதை உணர்ந்தனர். இதே போல மகாபாரதத்திலும் கிருஷ்ணரின் அவதாரத்தின் போதும் அவர்பல இடர்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. பஞ்சபாண்டவரைத் தவிர ஏனையோர் கிருஷ்ணரை ஒரு அவதாரமாக ஏற்றுக்கொள்ளவில்லை. இப்படியாக அவதாரங்கள் நிகழ்ந்தபோதெல்லாம் அதனைப் பூரணமாக உணராமல் காலத்தையும், கிடைத்த சந்தர்ப்பத்தையும் வீணாக்கிவிட்டனர்.

தற்போதும், நாம் வாழுகின்ற சமகாலத்திலும் ஒரு அவதாரம் அவதரித்துள்ளது. இறைவன் மானிடரூபத்தில் பூவுலகில் நடமாடுகிறார். கடவுள் நம்முடன் வாழ்கிறார். இதனை நம்மில் அனேகர் உணராது, மனிதனைக் கும்பிடுவதாகவும் தர்க்கம் புரிந்து தமது வாழ்நாளில் கிடைத்துள்ள அரிய சந்தர்ப்பத்தை வீணாக்குகிறார்கள். இந்த அவதாரம் கடந்த 78 வருடங்களாக மனிதகுலத்திற்கு வழிகாட்டி வருகிறது. இந்த அவதாரத்தின் 79வது அவதாரதினத்தைக் கொண்டாடுகிறோம். இந்த அவதாரம் இன்னும் 16 வருடங்களே இப்பூவுலகில் காட்சியளிப்பேன் எனவும் 95வது வயதில் உடலை விடுவேன் என்றும் கூறியுள்ளார். இந்த குறுகிய மிகுதிக் காலத்திலாவது வந்துள்ளது கலியுக அவதாரம் தான் எனத் தெளிந்து அவருடைய போதனைகளைப் பின்பற்றி ஆத்ம விடுதலையை அடைய வேண்டுமென்பதற்காகவே, பல்வேறு ஆதாரங்களைச் சமர்ப்பிக்கிறோம்.

## இந்துமத நோக்கில்

## <u>5000 வருடங்களுக்கு முற்பட்ட ஏடுகளில் பாபாவின் விபரம்</u>

பங்களூரில் பிரபல சோதிட ஆச்சாரியராக விளங்கும் ஸ்ரீ கஞ்சூர் நாராயண சாஸ்திரிகள் அண்மையில் ரிஷி சுகமுனிவரால் எழுதப்பட்ட சுகர் நாடிக்கிரந்தத்தில் ஒரு கட்டு ஏடுகளைக் கண்டெடுத்தார். சமஸ்கிருத மொழியில் "சாயி சரித்திராமிர்தக் கிரந்தம்" என்ற பெயருடன் நூற்றுக்கும் மேற்பட்ட ஏட்டுச் சுவடிகளைக் கொண்ட கட்டு அது. 5000 ஆண்டுகளுக்கு முன்பாக சுகமுனிவரால் எழுதப்பட்டதாகக் கருதப்படுகிறது.

அனேக விபரங்களைக் கூறும் இந்த சுகர் நாடி ஏடுகளில் அவதாரம் அவதரிக்கப்போவது அக்ஷயவருடம், கார்த்திகை மாதம், செவ்வாய்க் கிழமை கிருஷ்ண பக்ஷ சதுர்த்தசித் திதி திருவாதிரை நட்சத்திரம் 4ஆம் பாதம், விருச்சிக லக்கினம் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிக்கப்பட்டுள்ளது. அவர் அனிமா முதலிய அட்டமா சித்திகளும் கைவந்தவர் எனவும், தம் இஷ்டத்தினால் காரியங்களை முடிக்கும் "சங்கல்ப சித்தர்", பெரும் சக்தி படைத்தவர், ஆனால் உலகப் புகழிலேயோ, பணத்திலேயோ பற்றில்லாதவர். விரும்பியநேரத்தில் இறக்கக் கூடிய "இச்சா மரணப் பிராப்தி" பெற்றவர். பல உருவங்களிலும் போய் அவர் மக்களுக்கு தரிசனம் கொடுப்பார். சங்கடங்கள், அபாயங்கள், தடைகளை நீக்குவார். ஆத்மபலத்தைத்தரும் கல்வி நிலையங்களை ஸ்தாபிப்பார். இந்த மகாபுருஷர் பிரம்மச்சாரியாக வாழ்ந்து பிறருக்குச் சேவை செய்வார். ஆணையும், பெண்ணையும் சமமாகக் காண்பார். பெண்கள் மத்தியில் ஒரு தாயைப்போல உலாவுவார். அவர் ஒரு பிரேமை சொரூபனாகவும், ஆனந்த சொரூபனாகவும், ஞான சொரூபனாகவும் விளங்குவார். ஆனால் ஆத்மஞானம் அடைந்தவர்களே அவருடைய ஆனந்த சொரூபத்தை அனுபவிக்க முடியுமென்றும், **ஜென்மாந்திர பாபம் உள்ளவர்களுக்கு அவரின் அருள் கிட்டாது என்றும் சுகர் நாடியில் கூறப்பட்டுள்ளது.**

சுகர்நாடி, சாயிநாதர் விஷ்ணு சொரூபம் என்றும், சாட்சாத் மகாவிஷ்ணுவின் அவதாரமே என்றும் வலியுறுத்துகிறது. சாயிநாதரைக் காண்பது மகாவிஷ்ணுவைக் காண்பதற்குச் சரி என்கிறார் ரிஷி சுகர். நாம் அறிந்ததை விட மேலதிகமாகவும் ஒன்றைச் சொல்கிறது சுகர் நாடி. அதன்படி கபிர்தாஸ் என்ற வடநாட்டு மகானே ஷிர்டி சாயி பாபாவாகப்பிறந்து பின்னர் சத்தியசாயிபாபாவாக வந்ததாகவும் அவர் இன்னொரு உருவில் மறுபடியும் வருவா ரென்பதுமாகும்.

ரிஷி சுகரின் அற்புதம் மிக்க இந்த ஏட்டைக் கண்டுபிடித்த கஞ்சூர் நாராயண சாஸ்திரி கூறுகிறார், "இந்த ஏடுகளைக் கண்டுபிடிக்கமுன் நான் ஒரு சாயிபக்தனாக இருக்கவில்லை இந்த ஏடுகளைநுணுகி ஆராய்ந்தபோது, எங்கள் மத்தியில் வசிப்பது கடவுளின் அவதாரமே என்று அறிந்து கொண்டேன். ஆதலால் ஸ்ரீ சத்திய சாயி பாபாவைப் பார்க்கப் போனேன், அவரைக் கண்டவுடனேயே நான் ஒரு மகாசக்தியின் அண்மையில் இருக்கிறேன் என்பதை அறிந்து கொண்டேன். இந்த சாயி கிரந்தத்தை மக்கள் படிக்க வைக்க அதை அச்சிட வேண்டும். ஸ்ரீ சத்தியசாயிபாபாவின் பிறப்பு, வந்த நோக்கம், ஆகியவற்றை அறிந்திராத மக்களுக்கு இது பெரும் உதவியாக இருக்கும். காலத்தையும், இடத்தையும் கடப்பதற்கு ஒரு பாலமாகத்தான் இந்த சுகர் நாடி செய்யப்பட்டுள்ளது. இது ஒரு சைதன்யக் கிரந்தம். அதாவது, ஆத்மசக்தி நூல்" என்று சாஸ்திரிகள் கூறி முடிக்கிறார். (ஆதாரம் :– ஸ்ரீமதி சகுந்தலா பாலு எழுதிய LIVING DIVINITY)

இன்னும் இந்திய ஜோசிய ஆராய்ச்சிக் கழகத்தின் அங்கத்தினரான E.V.V. சாஸ்திரி அவர்கள் பல்லாயிரக் கணக்கான வருடங்களுக்கு முன் பல்வேறு முனிவர்களால் எழுதப்பட்ட ஓலைகளைப்படித்து, அவற்றில் ஸ்ரீ சத்திய சாயி பாபாவைக் குறிக்கும் பகுதிகளைத் தொகுத்து வெளியிட்டுள்ளார். அவற்றிலிருந்து சில பகுதிகள்;

**1. அகத்தியர் நாடி சொல்கிறது ;** சத்யசாயி பாபா மக்களின் தீராத நோய்களையெல்லாம் மின்னல் வேகத்தில் குணப்படுத்துவார். அவரது சங்கல்பத்தினால் மக்களுக்கு நல்ல ஆரோக்கியமும் வழங்குவார். மிக அதிகமான அளவில் கல்விக் கூடங்கள் அவரால் நிர்மாணிக்கப்படும். ஆன்மீகக் கருத்துடைய புத்தகங்கள் அவரால் பதிப்பிக்கப்படும். தர்மத்தை நிலைநாட்டுவதும், அழிந்து போயுள்ள தர்மத்தை மீண்டும் உயிர்ப்பிப்பதும் அவரது வாழ்க்கையின் முக்கிய குறிக்கோளாக இருக்கும். அவர் இந்தப் பிரபஞ்சத்தின் தந்தை என்றும், எதையும் மன்னித்து விடும் கடவுளின் அவதாரம், வழிகாட்டும் குரு, காப்பாற்றும்கடவுள், இவ்வுலகத்தின் தந்தை .............." இவ்வாறு வர்ணிக்கிறது.

**2. புதநாடி சொல்கிறது ;** "பாபா எப்போதும் நிரந்தர ஆனந்தத்தில் ஆழ்ந்திருப்பார்"

**3. சுக்கிர நாடி கூறுகிறது ;** அவர் தங்கியிருக்கும் இடம் பிரசாந்தி நிலையம் என அழைக்கப்படும். முக்கிய கருத்துக்களாக சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை ஆகியவற்றை அழுத்தம் திருத்தமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக் கூறி உலகம் முழுவதும் அமைதியை நிலைநாட்டிப் பரவச் செய்வார். மனித குல சேவை மகிழ்ச்சியளிக்கும். இவ்வாறு நீண்டு சொல்கிறது சுக்கிர நாடி

**4. பிரம்ம நாடி கூறுகிறது ;** அவரது வாழ்வில் வியாழக்கிழமை புனித தினமாகக் கருதப்படும். அவரது வாழ்க்கையாலும், நடத்தையாலும், அவர் புட்டப்பர்த்தியில் வாழும் ஒரு சாதாரண மனிதர் என்ற மாயையை உருவாக்குவார். அவர் நாராயணன் என்ற பெயரைத் தாங்கியிருப்பார். அவர் சிவசக்தியின் அவதாரம். ஷீர்டி சாயியின் மறு அவதாரம்.'' என்று வர்ணிக்கிறது பிரம்ம நாடி.

**5. பழனி சுப்பிரமணிய சுவாமி கோவில் நாடி ;**

பழனி சுப்பிரமணிய சுவாமி கோவிலில் ஒரு நாடி பாதுகாக்கப்பட்டு வருகிறது. அதில் ''ஆந்திரப்பிர தேசத்தில், சுற்றிலும் தமிழ், கேரளம், கர்நாடக பிரதேசங்கள் சூழ்ந்திருக்க சித்திராவதி நதிக்கரையில் கடவுள், தானே அவதாரம் செய்வார். அவரது பெயர் சத்திய நாராயணன் என்பதாகவே இருக்கும். அவர் மிக உன்னதமானயோகி. அவர் எப்போதும் உறங்குவதே இல்லை.'' என்று குறிக்கப்பட்டுள்ளது.

**6. பத்ம புராணத்தில் :** ''பர்த்தி என்ற பெயர் பெற்ற கிராமத்தில் பிறக்க இருக்கும் அவர் பெயர் சத்தியம். அவர் 5 அடி 3 அங்குலம் உயரம் இருப்பார். அவர் ஒரு சக்திவாய்ந்த காந்தத்தைப் போல உலகம் முழுவதையும் தன்னை நோக்கி இழுப்பார்'' என்று கூறுகிறது.

**7. நொஸ்ட்ரடாமஸ் ;** 16 ஆம் நூற்றாண்டில் மிகப் புகழ் பெற்ற தீர்க்கதரிசி. அவர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர். அவர் எழுதிய பல தீர்க்கதரிசனங்கள் உண்மையாக உள்ளதை உலகம் உன்னிப்பாக ஆராய்ந்து வருகிறது. அவர் வரவிருக்கும் அவதாரத்தைப்பற்றி பின்வருமாறு கூறுகிறார். ''வரவிருக்கும் உலகை ஆள்பவர் வியாழக் கிழமைகளை புனித நாட்களாக பிரகடனப்படுத்துவார். உலகின் அனைத்து நாடுகளும் அவரைப் பார்த்து வியக்கும். அவரது அளப்பரிய ஞானத்தையும், சக்தியையும் கண்டு உலகம் முழுவதும் அதிசயப்படும். உலகின் அனைத்துப் பகுதியிலிருந்தும் வந்து அவருக்கு மதிப்பளிப்பார்கள், வந்தனை செய்வார்கள்'' என்று கூறுயிருக்கிறார்.

## கிறிஸ்தவ மத நோக்கில்

### புனித விவிலிய நூலில் தீர்க்கதரிசனம்

புனித விவிலிய நூலின் தொகுப்பிலே கடைசிநூல் பரியோவான் எழுதிய திருவெளிப்பாடு பற்றிய புத்தகமாகும். இந்தநூலில் அவர் தமக்கு இயேசுக் கிறிஸ்து தனது தூதனூதனூடாக வெளிப்படுத்திய தொடரான காட்சிகள் அல்லது தரிசனங்களையும் தன் அனுபவங்களையும் விபரிக்கிறார். (வெளிப்பாடு 1;2) அவருக்குக்கிடைத்த தரிசனங்கள் பலவகைப்பட்டன. முதலாவது தரிசனத்தில் அவர் ஆசியாவிலுள்ள எபேசு, சிமிர்னா, பேர்கமு, தியத்திரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிக் கேயா என்ற ஏழு திருச்சபைகளையும் காவல்புரியும் ஏழு தூதர்களையும் கண்டார். இந்த தேவதூதர்கள் சில ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் கூறியதுடன் எதிர் காலத்தைப்பற்றிய சில தீர்க்கதரிசனங்களையும் வெளிப்படுத்தினர். இவற்றிலே புதிய திருச்சபைபற்றியும், உலகத்தைப் பற்றியும், மக்களைப்பற்றியும் ஆண்டவரின் வருகைபற்றியும், அவர் மேற்கொள்ள இருக்கும் பணிகள் பற்றியும், அதன் பலன்கள் பற்றியும் விளக்கங்கள் அடங்கியுள்ளன. அவருக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் பல சங்கேதக் குறிப்புகளாக வெளிப்படுத்தப்பட்டவையாகும் (வெளிப்பாடு அதி. 1–3) தொடர்ந்து 19ஆம் அதிகாரம் வரை பல்வேறு வகையான காட்சிகள் வர்ணிக்கப்படுகின்றன. 19ஆம் அதிகாரத்தில் பரி.யோவான் மனுகுலத்தை அழிவுப்பாதையினின்றும் காத்தருளி மீட்பவர் மீண்டும் உலகுக்கு வருகிற காட்சியைக் காண்கிறார். இந்த மீட்பவர் ஸ்ரீ சத்திய சாயிபாபாவே என்பது பரி.யோவன் கண்ட தரிசனத்தின் விபரத்தில் இருந்து ஐயத்துக்கிடமின்றி தெளிவாகிறது. அவ்விபரம் வருமாறு ; ''மேலும் பரலோகத்தில் வாசல்கள் திறந்திருக்கக் கண்டேன். அங்கே ஒரு வெண்புரவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டது. அதில் அமர்ந்திருப்பவர் **உண்மை என்றும் சத்தியம் என்றும்** அழைக்கப்படுவர். அவர் தரும வழியில் நியாயம் தீர்ப்பவர். யுத்தம் பண்ணுபவர். அவருடைய கண்கள் அக்கினிச் சுவாலைபோல் ஒளிர்ந்தன. அவருடைய சிரசிலே அனேககிரீடங்கள் காணப் பட்டன. அவருக்கேயன்றி மற்றொருவருக்கும் தெரிந்திராத அவரது நாமம் எழுதப்பட்டிருந்தது. அவர் இரத்தத்திலே தோய்ந்த அங்கியை அணிந்திருந்தார். அவருடைய நாமம் கடவுளுடைய வார்த்தை என்பதாகும். பரலோகத்திலிருக்கிற சேனைகள் எல்லாம் தூய மிருதுவான வெண்ணிற ஆடை தரித்தவராய், வெண்புரவியில் ஏறி அவரைப் பின்தொடர்ந்தனர். அவருடைய வாயினின்றும் புறப்படுகின்ற கூர்மையான வாள்கொண்டு அவர் பல ஜாதி மக்களையும் வெற்றிகொள்கிறார். அவர்களை இரும்புக்கோலால் ஆள்கிறார். அவர் சர்வ வல்லமையுள்ள ஆண்டவரின் உக்கிர கோபம் என்னும் மது ஆலையை மிதிக்கிறார். அரசர்களுக்கெல்லாம் அரசர். கடவுள்களுக்கொல்லாம் கடவுள் என்கின்ற நாமம் அவருடைய அங்கியின் மேலும் தொடையின் மேலும் எழுதப்பட்டிருக்கிறது. (வெளி. அதி . 19 : 11 – 16)

“வெண்புரவி” என்பது பாபா பயணம் செய்யும் வெண்ணிறக் கார்களைக் குறிக்கும். “உண்மையும் சத்தியமும்” என்பது கருத்துப்படி சத்தியசாயிபாபா வின் நாமமாகும். “சத்தியா” என்பது சத்தியத்தைக் குறிக்கிறது. சாயிபாபா சிவனுடைய கண்களைக் கொண்டிருக்கிறார். அவை “அக்கினிச் சுவாலை” போன்றவை. “அவருடைய தலையில் அனேக கிரீடங்கள்” என்பது அவரது அதி அற்புதமான கேச அமைப்பைக் குறிப்பதாகும். ஒவ்வொரு முடியும் ஒவ்வொரு கிரீடத்தைக் குறிப்பதுடன் முழுமையாக முழுக் கேசமும் ஒரு பிரம்மாண்ட மான கிரீடம் போன்றது. சாயிபாபா தன்னுடைய நாமத்தின் உட்பொருளை அவராகவே வெளிப்படுத்தும்வரை அதனுடைய அர்த்தம் ஒருவருக்கும் தெரியாமல்தான் இருந்தது. “இரத்தத்தில் தோய்ந்த ஆடையை அணிந்திருக்கிறார்” என்பது சாயிபாபா அணிந்தி ருக்கிற செந்நிறமான அங்கியைக் குறிப்பதாகும். “அவருடைய வாயினின்றும் புறப்படும் கூர்மை யானவாள்” அவருடைய ஞான வாக்கியங்களைக் குறிப்பதாகும். இவை அறியாமை என்னும் இருளடைந்த காட்டை வெட்டிச்சரித்து வாழ்வில் ஒளியை வீசச் செய்கிறது. “ கடவுளின் வார்த்தை” என்பது சத்தியமாகும். சத்திய சாயிபாபா கடவுளின் வார்த்தையாவார். சாயியை சூழவுள்ள மாணவர்களும், தொண்டர்களும் எப்போதும் மிருதுவானதூய வெண்ணிற ஆடைகளையே அணிந்திருக்கிறார்கள். வெளிப்பாட்டின் 19ஆம் அதிகாரம் 19ஆம் 20ஆம் வசனங்கள் சாயிபாபாவுக்கும் அவரது தொண்டர் களுக்கும் எதிராகச் செயற்படுகின்ற தீயசக்திகள் பற்றியும் அச்சக்திகள் அழிக்கப்படுதல் பற்றியும் சங்கேதமாக உணர்த்தப்படுகின்றன. “அவர்கள் எரிகின்ற கந்தக்கடலில் உயிரோடு தள்ளப்பட்டனர்” என்பது சங்கேத வார்த்தையாகும். “அவர்கள் சாம்பரானார்கள் (விபூதி). எஞ்சியவர்கள் குதிரைமேல் அமர்ந்திருக்கின்ற வருடைய வாயினின்றும் புறப்படுகின்ற வாளினால் அழிக்கப்பட்டனர்” என்பது அவருடைய ஞானவாக்குகளைக் குறிப்பதாகும். இந்த வசனங்கள் சாயிபாபாவின் இரண்டு சக்தி மிக்க கருவிகளைக் குறிக்கிறது. ஒன்று விபூதி மற்றது அவருடைய போதனைகள் (அவருடையவாள்)

சாயிபாபாவுக்கும், இயேசுகிறிஸ்துவுக்கும் உள்ள தொடர்பை சாயிபாபாவே 1972ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் தின உரையில் வெளிப்படுத்தினார். “ஒருவிடயத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இயேசுவானவர் தெய்வீகத் துடன் இரண்டறக் கலக்கும்போது சில தகவல்களை அவருடைய சீடர்களுக்குத் தெரியப்படுத்தினார். காலங்காலமாக உரையாளர்களால் வெவ்வேறு விதமாகத் திரித்துப் பொருள் கூறப்பட்டன. எழுத்துக்கு மேல் எழுத்தாக, கருத்துக்கு மேல் கருத்தாகத்திணித்து இக்கூற்றுக்களை அர்த்தமற்ற வார்த்தைக் குவியலாக்கிவிட்டனார். ஆனால் அதுமிக எளிதானதாகும். அவர் “**உங்களிடையே என்னை அனுப்பியவர் மீண்டும் வருவார்**” என்று கூறி ஒரு செம்மறி ஆட்டைச் சுட்டிக்காட்டினார். செம்மறி ஆடு ஒரு சங்கேதக்குறியாகும். அதன் ஒலியைக் குறிப்பதாகும். (ஆடுகத்தும் சத்தம் பா... பா....) இது பாபாவின் வருகைபற்றிய அறிவிப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய நாமம் சத்தியம் என்று கிறிஸ்து வெளிப்படுத்தினார். அவர் இரத்தச் சிவப்பு நிறமான அங்கியை அணிவார் என்று கிறிஸ்து கூறினார்.

(இத்தருணத்தில் பாபா தாம் அணிந்திருந்த அங்கியைச் சுட்டிக்காட்டினார்) கிறிஸ்து ஒரு போதும் தாம் மீண்டும் வருவதாகப் பிரகடனப்படுத்த வில்லை. அவர், தன்னை அனுப்பியவர் வருவார் என்றே கூறினார். அந்த பா... பா.. என்பது இந்த பாபாவே''

இயேசு பிலாத்துவுக்கு முன்னால் விசாரணை மண்டபத்தில் தன்னுடைய பரலோக இராச்சியத்தைப் பற்றியும் தன்னுடைய வருகைக்கான காரணம் பற்றியும் வெளிப்படுத்தினார். ''சத்தியத்திற்கு சாட்சி பகர வேண்டும் என்ற காரணத்திற்காகவே நான் பிறந்தேன். இதற்காகவே நான் இந்த உலகத்திற்கு வந்தேன்'' (யோவான் 18:37,38). அந்த சத்தியமே சத்தியா. இயேசு என்பது இந்த சாயியின் ஒரு வடிவமே !

(ஆதாரம் :– விக்டர் காணு எழுதிய ''சாயி பாபா கடவுள் அவதாரம்)''

## இஸ்லாமிய மத நோக்கில்

### பேராழியின் ஒளி (THE OCEAN OF LIGHT)

மிகவும் அண்மைக் காலத்தில் தெஹ்ரான் நகரில் புத்தக விற்பனை நிலைய மொன்றில், ஒரு ஈரானிய எழுத்தாளர் அங்குள்ள நூல்களை அங்கொன்றும், இங்கொன்றுமாக கண்ணோட்டம் விட்டார். அப்போது காத்திராப்பிரகாரமாக அங்கிருந்த ஒரு நூற் தொகுதியைக் காணும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது. அந்தத் தொகுதி நூலே 25 தொகுதிகளாக கெளியிடப்பட்ட ''பேராழியின் ஒளி''. இது முகஹ்மது நபி (ஸல்) அவர்களின் தீர்க்க தரிசனச் சொற்பொழிவுகளின் 14 வது பதிப்பாகும். இச் சொற்பொழிவுகள் முகஹ்மது நபி (ஸல்) அவர்கள் அமரத்துவம் அடைந்து 700 ஆண்டுகளுக்குப்பின் அவருடைய சீடர்களால் சேகரிக்கப்பட்டு தொகுக்கப் பட்டவையாகும்.

''பேராழியின் ஒளி'' என்ற இந்த நூலின் 13வது தொகுதி மெஹ்டி மௌத் (MEHEDI MOUD) என அராபிய மொழியில் கூறப்படும் அதன் பொருளாவது ''வாக்களிக்கப்பட்ட மகா குரு'' (THE GREAT TEACHER THAT WAS PROMISED) என்பதாகும். இம்மகாகுருவே ''பூவுலகின் முதல்வர்'' (MASTER OF THE WORLD) ''காலத்தின் முதல்வர்'' (MASTER OF TIME) ''இறைவனின் தலைவர்'' (GOD'S PRESIDENT) ''நில உலகில் தோன்றியிருக்கும் இறைவனின் ஒரு பெரும் பகுதி'' (A GREAT PART OF GOD ON THE GROUND) '' பேசும் உபதேசிக்கும் கடவுள் '' ( GOD, SPEAKING AND ADVISING)......... என்றெல்லாம் புகழப்படுபவர் ஆகும். இவற்றின் மேலாக முகஹ்மது நபி (ஸல்) அவர்கள் எதிர்வரும் தீர்க்கதரிசியின் அங்க அடையாளங்களையும் தோற்றத்தையும் சரியாகக் கண்டுகொள்ள வகை செய்யும் முகமாக பல அறிகுறிகளையும், அவதானங்களையும் தந்துள்ளார்.

ஒருசமயம், நபி(ஸல்) அவர்களின் சீடர்கள் அவரை அணுகி ''தாங்கள் பூவுலகின் முதல்வர் இல்லையா?'' என்று கேட்டார்கள். அதற்கு அவர், ''அவ்வாறு இல்லை'' என்று கூறியதோடு ''இது காலவரை வராத இறைதூதர்களில் ஒரு தீர்க்கதரிசி இனி, சகல வல்லமை பூண்டு வருவார்'' என்று தீர்க்க தரிசனம் புகன்றார். இந்நூல் மூலம் அவர் கூறிய தீர்க்க தரிசியின் விபரங்கள் வருமாறு; (இவை பகவானின் தோற்றத்துடன் எவ்வாறு சரியாகப் பொருந்துகிறது என்பதை வாசகர்கள் அவதானிப்பார்களாக)

1. அந்தத் தீர்க்கதரிசியின் சிரசில் கேசங்கள் அடர்ந்து வெளிப்போந்து வியாபித்து இருக்கும்.
2. அவருடைய நெற்றி பருத்தும் உட்குவிந்தும் விளங்கும்.
3. அவருடைய நாசி சிறிதாய், சிறிது தள்ளியபடி வெளிப்போந்து விளங்கும்
4. அவருடைய முன்வாய்ப் பற்கள் இடையீடு கொண்டிருக்கும்
5. அவரது கன்னத்தில் ஒரு சிறு காய் போன்ற கருமச்சம் விளங்கும்
6. அவருடைய தாடி, மீசை தெரியாதவாறு எப்போதும் சுத்தமாக சவரஞ் செய்யப்பட்டிருக்கும்.
7. அவருடைய ஆடை அனற் சுவாலை போல் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. அவர் இரண்டு அங்கி அணிவார்
9. அவருடைய முகத் தோற்றம் ஒருவேளையில் செம்பொன் நிறமாகவும், மறு வேளையில் பொன்னிறமாகவும், சிலவேளைகளில் இருண்ட கருநிறமாயும், சிலவேளைகளில் வான்மதிபோல் பிரகாசமாயும் விளங்கும்.
10. அவருடைய உடல் அளவிற் சிறியதாயினும் அவரின் வயிற்றுப்பகுதி பெரிதாகவே இருக்கும்
11. அவரது கால்கள் ஓர் இளஞ்சிறுமியின் கால்கள் போல் இருக்கும்
12. பிறப்பில் இருந்தே அவருக்கு உலகின் சகல சமயங்களின் போதனைகளும் மனனமாக இருக்கும்
13. உலகின் தொடக்க நாள் முதலான சகல அறிவியலும் அறிவும் அவருடைய சிரசில் இருக்கும்.
14. இறைவனிடம் நீ கேட்கும் பொருள்கள் அனைத்தையும் உலகின் முதல்வரான அவர் உனக்களிப்பார்.
15. உலகின் சகல புதையல்களும் அவருடைய காலடிகளில் இருக்கும்.
16. கனதியிற் குறைந்த சாமான்களை அவர்வழங்குவார்.
17. அவரது மெய்யடியார்கள் ஒரு மாபெரும் மரநிழலில் சங்கமிப்பர். (ஸாது அனுக்கிரஹ வடவ்ருக்ஷ ப்ரதிஷ்டாப காய நம:)
18. அவரது அடியார்களிற் பெரும்பாலோர் நெற்றியில் திலகமிடுவர்
19. அடியார்களுக்கு நடுவில் சென்று அவர்களின் சிரசினைத் தொட்டு ஆசீர்வதிப்பார்.
20. அவரைக் காணும் ஒவ்வொரு கண் மட்டுமன்றி, அரூபமாக நிற்கும் சகல ஜீவன்களும் மகிழ்வுடன் விளங்கும்.
21. இந்த மண்ணுலகில் அவர் 95 ஆண்டுகாலம் வாழ்வார்.
22. அவரது அடியார்கள் அவரைத் தரிசிப்பதற்காகத் தமது கழுத்துகளை கொக்குபோல் நீட்டி நிற்பர்.
23. அவரது இறுதி 20 ஆண்டுகளில் அனைத்து லகினதும் ஏகமன்னர் போல் விளங்குவார். அப்போதும் உலகின் மூன்றில் இரண்டு பங்கு மக்களே அவரில் நம்பிக்கை கொண்டிருப்பர். முஸ்லீம்கள் அவரின் மறைவுக்கு 9 ஆண்டுகள் முன்பாகவே இனங்காண்பார்கள்.
24. ஒரு மலையில் அவர் வாழ்வார்.
25. அவரது இல்லம் சற் சதுரமாக இருக்கும்.
26. அவர் உலகைப் பிரகாசமாகவும், அமைதியுடையதாகவும் இருக்கச்செயவார்.
27. ஆதலால், நீ எவ்வித ஏமாற்றமும் இன்றி உலக முதல்வர் தனது ஊனுடலில் திருவாய் மூலம் தருங்காட்சியை உணர்ந்து கொள்ளக் கடவாய்.

இவை முகஹ்மது நபி (ஸல்) அவர்கள் சுமார் 1500 வருடங்களுக்கு முன் கூறிய அடையாளங்கள்

ஆதாரம்:- (சகுந்தலா பாலு எழுதிய "வாழும் தெய்வீகம்" ( LIVING DIVINITY) என்ற நூலில் இருந்து இக்கட்டுரையை எழுதியவர் பெக்கி மேஸன் (PEGGYMASON)

## ஒரு விஞ்ஞானியின் பார்வையில்

### பாபாவின் வானளாவிய தேஜஸ்

டாக்டர் பரனோஸ்கி (DR. BARANOWSKY) ஒரு ரஷ்ய நாட்டு விஞ்ஞானி. அவர் ஒரு புதுவிதமான புகைப்படக் கருவியைக் கண்டுபிடித்தார். இந்தப் புகைப்படக்கருவிமூலம் மனிதனைச் சுற்றியுள்ள காந்த மண்டலத்தைப் (AURA) படமாக்கலாம். இதனை ஆராய்ச்சி செய்வதன் மூலம் மன எழுச்சிகளையும், சிறப்புக் குணங்களையும், மனப்போக்குகளையும் அறியலாம். அவர். 1979ஆம் ஆண்டு யூலைமாதத்தில் ஒருவாரமாக பெங்களூரில் தங்கியிருந்து சத்தியசாயி கல்லூரி மாணவர்களுடன் உரையாடினார். யூலை 20ஆம் திகதி மாலை, பகவானின் ஆதரவில் 25க்கு மேற்பட்ட பேராசிரியர்களுடனும் 670 குருமாருடனும் ஆன்மீக விடயங்கள் பற்றி பேசினார். அவர் பேசியதாவது;

"இன்று மாலை இங்குவந்து உங்களிடம் "குறிப்பிடத்தக்க மானிட நிகழ்ச்சி" என்பதைப் பற்றிப் பேசுவதில் மகிழ்ச்சியடைகிறேன். முக்கியமாக, மனித குணம் நான்கே நான்கு எழுத்துக்களைக்கொண்ட LOVE அன்பு (பிரேமை) என்ற வார்த்தையில் அடங்கியுள்ளது. மனித உடலைச் சுற்றியுள்ள ஆற்றல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைகளைப் புகைப்படம் எடுக்கவல்ல கருவிகளைப் பற்றிக் கேள்வியுற்றிருப்பீர்கள் என நம்புகிறேன். அக்கருவியைக் கொண்டு பூதவுடலுக்கு வெளியில் அடிக்கடி நிலவும் மனித ஒளிவட்டத்தைப் (AURA OF MAN) புகைப்படம் எடுக்க இயலும். ஒருவனின் மன எழுச்சியாலும் ஆற்றல்களினாலும். அன்பு உணர்வினாலும் ஒளிவட்டம் உடலிலிருந்து வெளியேறுகிறது. 1969ஆம் ஆண்டிலிருந்து இப்புகைப்படக்கலை வளர்ச்சியடைந்து வருகிறது. மனிதர்களின் ஆற்றல் சக்தி வெண்ணிற வெளிச்சமுடையது. அன்புப் பெருக்கு ஏற்படும் போது நீலநிறமாகிறது. அந்த அன்பு மேலும் பெருகினால் இளஞ்சிவப்பு நிறமாகிறது. வெறுப்பு, கோபம் போன்ற உணர்ச்சிகள் ஏற்படும் போது அது சிவப்பு நிறமாக மாறும். நாம் ஒரு நிமிடம் கோபம் கொள்ளும் போது இரண்டு பற்றறிகளால் எரியும் சிறுபல்ப்பை 3 மாதகாலத்திற்கு எரியவைக்கக் கூடிய சக்தியை இழக்கிறோம். ஆகையால் தான் விஞ்ஞான, மருத்துவச் சான்றுகள் அன்பைப் போற்றி வளர்க்க எமக்கு வலுயுறுத்துகின்றன.

நான் இந்தியாவில் நூற்றுக்கும் மேற்பட்ட சாதுக்களைச் சந்தித்திருக்கிறேன். அவர்களுடைய ஒளிவட்டங்கள் ஒன்று அல்லது இரண்டு அடி விட்டமுள்ளதாகவே அமைந்திருந்தன.

நான் அமெரிக்காவிலிருந்து சாயிபாபா என்ற இந்த மனிதரை விஞ்ஞானி என்ற முறையிலேயே பார்க்கவந்துள்ளேன். கடந்த ஞாயிறு அன்று அந்த மாடி முகப்பிலிருந்து கீழே கூடியிருந்த பக்தர்களுக்குத் தரிசனம் தந்தார். அப்போது அவர் வெளியிட்ட ஒளிவட்டம் சாதாரணமனிதனின் ஒளிவட்டமல்ல. வெண்ணிற ஒளிவட்டம் சாதாரண மனிதனுடைய தைவிடவும் இரண்டு மடங்காக இருந்தது. நீல நிறம் எல்லை மீறி இருந்தது. அத்துடன் பொன்னிறம், வெள்ளி நிறம் ஆகிய நிறங்கள் இந்தக் கட்டிடத்தையும் தாண்டி வானளாவி நின்றன. இம்மாதிரியான நிகழ்ச்சிக்கு விஞ்ஞான விளக்கம் இல்லை. சுவாமி இரண்டு கால்களில் நடமாடும் (LOVE) அன்பு. இப்போது அந்த அன்பின் உருவத்தைக்கண்டேன். (தொடர்ந்து பகவான் உரையாற்றினார். உரையின் பின், பகவானின் அனுமதிபெற்று, மீண்டும் டாக்டர் பரனோஸ்கி உரையாற்றினார்)

சுவர்மி உரை நிகழ்த்தும்போது அவ தானித்தேன். இளஞ்சிவப்பு நிற ஒளிவட்டம் இந்தக் கூட்டத்தையே நிறைந்து இருந்தது. பின்னோக்கி சுவருக்குப் பின்பக்கமாகவும் சென்றதை அவதானித்தேன். ஒருவாரகாலமாக காலையிலும், மாலையிலும் சுவாமி உங்களூடே நடந்து செல்லும் போது அவருடைய இளஞ்சிவப்பு ஒளிவட்டம் அவர் தொடும் அல்லது பேசும் நபரினுள் சென்று பின்னர் அவரிடமே திரும்பி வருவதைக் கண்டேன். அது ஏனெனில் நாம் எல்லோரும் அவருடைய சக்தியைக் கிரகிக்கிறோம். அவருடைய சக்தி கரை காணாதது. அது எங்கும் பரவியிருக்கிறது. சக்கர நாற்காலியில் இருந்த சிறிய பெண் அருகில் சென்று கூச்சம் காட்டியதைக்கண்டேன். அப்போது அவரைச் சுற்றி எழுந்த பிரேமை ஒளிவட்டத்தைக் கண்டு ஆச்சரியத்தால் அசந்தே போய்விட்டேன்.

நான் கிறிஸ்தவனாகப் பிறந்திருந்தாலும், அதிலும் ரோமன் கத்தோலிக்கனானாலும், எந்த ஒரு கோட்பாட்டையும் கொண்டவன் அல்லன். எனது நாட்டிலுள்ள விஞ்ஞான சமூகம் கடவுள் உண்டு என்ற கோட்பாட்டை ஏற்றுக்கொள்ளக் கஷ்டப்படுகிறது. அவ்வாறு ஒப்புக்கொள்வது விஞ்ஞான, ரீதியாகாது என்கிறது. நான் இவ்வாறான ஒரு அறிக்கையை வெளியிடுவது, எனது நற்பெயருக்குக் கூட களங்கம் ஏற்படலாம். இரண்டு நாட்களுக்கு முன் அவருடைய கண்களை உற்று நோக்கினேன். அக்கண்களுள் ஒரு ஒளிதோன்றியது. அப்போது தெய்வீக முகத்தைக் கண்டேன். இதற்கு விஞ்ஞான விளக்கம் இருக்க முடியாது. அவரே அன்பு சொரூபம். நான் உலகத் தலைவர்கள் பலர் இருந்த மேடையில் பேசியுள்ளேன். ஆனால் இம்மாதிரியான ஒரு அனுபவத்தைப் பெற்றதில்லை. இதை மறக்க முடியாது.

(மூலம் : சனாதன சாரதி (தமிழ்) ஆகஸ்ட் 1979)

இந்த நீண்டகட்டுரையில், எமது மத்தியில் இறைவனே மனித ரூபத்தில் வந்துள்ளார் என்பதைப் பல்வேறு ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டியுள்ளோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமார் 5000 வருடங்களுக்கு முன் சுகமுனிவரின் ஏடுகளிலும் மற்றும் புராதன ரிஷிகளின் ஏடுகளிலும் இருந்து அவர்கள் பகவானின் வருகை பற்றிய குறிப்புகளை எடுத்துக் காட்டியுள்ளோம். புனித விவிலிய நூலில் இருந்தும், முஹமது நபி (ஸல்) அவர்கள் சுமார் 1500 வருடங்களுக்கு முன் பேசிய குறிப்புகளில் இருந்தும், ஒரு விஞ்ஞானியின் பார்வையிலிருந்தும் பல குறிப்புகளைத் திரட்டித் தந்துள்ளோம். எமது மத்தியில் கடவுள் மானிடரூபத்தில் வந்துள்ளார் என்பதை நீங்கள் உறுதியாக நம்பி, அவரின் போதனைகளின்படி நடந்து எமது வாழ்க்கையின் இலட்சியத்தை அடைய வேண்டு மென்பதே எமது நோக்கம்.

பகவான் பகவத்கீதையில் வாக்களித்தபடி மீண்டும் வந்துள்ளார். நாம் ஒரு அவதார காலத்தில் வாழும் ஒரு பெரும்பாக்கியம் பெற்றிருக்கிறோம். இந்த சந்தர்ப்பத்தைத் தவறவிட்டால் இனி எந்தப்பிறப்பில் இப்படியான பாக்கியம் கிடைக்குமோ தெரியாது. ஆகவே நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பகவானின் போதனைகளைப் பின்பற்றுவோமாக!

"யதா யதாஹி தர்மஸ்ய கலானிர்ப்பவதி பாரத!
அப்யுத் தானம தர்மஸ்ய ததாத் மானம் ஸ்ருஜாம் யாஹம்!!" கீதை IV - 7

"பாரதா, எப்போதெல்லாம் தர்மத்திற்கு வீழ்ச்சியும், அதர்மத்திற்கு எழுச்சியும் ஏற்படுகிறதோ, அப்போதெல்லாம் நான் என்னை சிருஷ்டித்துக் கொள்கிறேன்."

**திரு. ஆர். சரவணபவன்**

"ஜெய் சாயி ராம்"

"எனக்கு செயல் செய்யவேண்டும் என்ற நிர்ப்பந்தமுமில்லை, அதனால் எனக்கு ஒரு நன்மையும் இல்லை. ஆனால் நான் நிகழ்வுகளெல்லாம் செவ்வனே நடக்கவேண்டுமென்பதற்காக சதா ஏதோ செய்துகொண்டே யிருக்கிறேன். எனது வாழ்வே எனது செய்தி. நான் நித்திரை கொள்வதில்லை. நான் நித்திரைபோல் பாசாங்கு செய்வது, எனது உதவியாளர்கள், பக்தர்கள் அமைதியாகத் தூங்கவேண்டுமென்பதற்காகவே. இரவில் நான் வேறு உலகங்களுக்கும், பக்தர்களின் வீடுகளுக்கும் செல்கின்றேன். ஆகவே உங்கள் இல்லங்களை தூய்மையாக வைத்திருங்கள். எந்நேரமும் முன்னறிவித்தலின்றி வந்திடுவேன்"

- ஸ்ரீ சத்திய சாயி பாபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# ஓர் அவதாரின் [பகவானின்] சிறப்பம்சங்கள்

பகவான் என்ற சொல்லுக்கு 'பக' என்பதை உடையவர் என்ற பொருள். பண்டைக்காலத்து நிகண்டாசிரியர்களின் கூற்றுப்படி, 'பக' என்ற சொல் கீழ்க்கண்ட ஒப்பற்ற ஆறு இயல்புகளை உடையது:

1. ஐசுவரியம் – சக்தியின் மூலம் பெற்ற அதிகாரம்
2. வீரியம் – பராக்கிரமம்
3. யசஸ் – புகழ், கீர்த்தி
4. ஸ்ரீய – செல்வம், செழிப்பு
5. ஞானம் –
6. வைராக்கியம் – பற்றற்ற நிலை

மேலும் சாஸ்திரங்களின் கூற்றுக்களின்படி ஆறுவிதமான அடிப்படையான அல்லது முதன்மையான மர்மங்களை (இரகசியங்களை) வெற்றி கொண்டவரே பகவானென்று அழைப்பதற்குத் தகுதி பெற்றவராவர். இவையாவன :

* படைப்பிலுள்ள உயிரினங்களின் தோற்றம், மறைவு ஆகியவைகளின் மர்மத்தை அறிந்தவரும்.
* அவைகளின் சீரழிவையும் அதிலிருந்து மீட்கும் மர்மத்தை அறிந்தவரும்,
* அவைகளின் அஞ்ஞானம் ஞானம் ஆகியவற்றின் மர்மத்தை அறிந்தவருமேயாகும்.

பகவான் என்ற சொல் பேரின்பம் என்றும் பொருள்படும், விஷ்ணுபுரானத்தின் கூற்றின்படி பகவான் என்ற சொல்லிலுள்ள

ப – என்பதன் அர்த்தம், பிரபஞ்சம் முழுவதையும் பராமரிப்பவர் ஆதரிப்பவர்.

க – என்பதன் அர்த்தம், தலைவர், முன்னேறத் தூண்டுபவர், வழிகாட்டுபவர்.

வ – எல்லாம் அடங்கியுள்ள மூலப்பொருள், எல்லாவற்றிலுமுள்ள மூலப்பொருள். சாயி லீலா மகிமைகளிலிருந்து பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவும் பஞ்ச பூதங்களைக் கட்டுப்படுத்த வல்லவர் என்றும், எங்கும் நிறைந்திருப்பவரென்றும், ஊடுருவிச் செல்லும் ஆற்றல் உள்ளவர் என்றும் அறிகின்றோம்.

சமஸ்கிருத இலக்கிய நூலான "சரணாகதி கத்யா" பகவான் என்பதற்கு பின்வரும் விளக்கத்தைக் கொடுக்கின்றது :

- எல்லையற்ற பேரானந்தமுடையவர். பிரபஞ்சத்தி லிலுள்ள அனைத்துயிர்களை உய்விக்கும் பேரானந்தம்.
- உலகைப்பற்றிய இரச்சியங்களை அறியும் அசாதாரண அறிவுடையவர்
- இயற்கையின் மேல் ஆதிக்கம் செலுத்தும் வலிமை
- சக்தி, சாந்தி, இனிய பழக்கங்கள், தாயைப் போன்ற பிரேமை, மிருதுத்தன்மை, இரக்கம், நேர்மை, உயர்வு, தோழமை, பாரபட்சமின்மை, கருணை, மேன்மை உதாரகுணம், திறமையான உத்வீகம், வீரம், துணிவு, உற்சாகம், சத்தியத்தில் உறுதி இன்னும் இதுபோன்ற பல நற்பண்புகளை உடையவர்.

கலாநிதி கோகக் (Dr. Gokak) சக்தி, ஆதிக்கம், கம்பீரம், ஒளிச்சிறப்பு ஆகையவைகளில் மற்றையோரைக் காட்டிலும் பகவான் மேம்பட்டவர் என்று அறிவுறுத்திக் கூறியுள்ளார். பகவான் சத்திய சாயிபாபாவின் கூற்றுக்கள்:

"அவதாரம் என்ற சொல்லின் அர்த்தம், இறங்குதல், கீழே வருதல் ஆகும். எல்லையற்ற பரம்பொருள் மனிதகுலத்தை மேம்படுத்தும் பொருட்டு சில வரம்புகளைத் தன்மேல் விதித்துக்கொண்டு உலகில் பிரவேசிக்கின்றது."

"அவதாரில் தெய்வீகமும் மனிதத்தன்மையும் ஒன்றிணைகின்றது"

- அவதார், பிராணிகள் மனிதர்களுக்குடைய ஐம்புலன்களையுடையவர்.
- மனிதனுக்குரித்தான மனம், புத்தி, உணர்ச்சி, அகங்காரம் ஆகியவையையும் உட்கொண்டு ள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இவற்றுடன் விசேடமான தனக்கே உரித்தான ஏழு பண்புகளுடையவர்.

1. சிருஷ்டி – படைக்கும் ஆற்றல்
2. ஸ்திதி – பராமரித்தல், பாதுகாத்தல், அபயமளித்தல்
3. லயம் – அழித்தல்
4. திரோதனம் – மறைத்தல்
   (இனிக் கூறப்படும் மூன்று பண்புகளும் ஒரு பூரண அவதாரிடமே காணப்படும்)
5. அனுக்கிரகம், அருள்
   இருவகையானவருக்குக் கிடைக்கும். தகுதியுள்ள வருக்கும் தகுதியற்றவருக்கும் கிடைக்கும்.
6. நாமம் – நாமம் உச்சரிக்கும் போது பிரசன்னமாதல்
   உருவம் – வழிபடும்போது பிரசன்னமாதல் அல்லது
7. அதற்குரிய அறிகுறிகளைக் (விபூதி வெளிப்படுதல் பூவிழுதல், அமிர்தம் சொரிதல்) காண்பித்தல்

சுற்சானோ ஒற்றோ (Suzano Otto) என்ற ஜேர்மனியர் தனது "இந்தியா பவித்திரமானது" என்ற நூலில் பரிசுத்தத்தின் தன்மைகள் மூன்றைக் குறித்துள்ளார் அவையாவன.

1. பேராற்றல், அச்சம் தரும் வல்லமை (Tremendous). இதில் பயமும், பக்தியும், நம்பிக்கையும் கலந்திருக்கின்றன. சுவாமியின் தரிசனத்தின் போது இத்தன்மையை உணரலாம்.
2. புதிர் அல்லது மர்மம் (Mystery). கூற்றுக்களில் ஆழ்ந்த கருத்து, இதற்கும் அப்பாற்பட்ட செயல்கள், நிச்சயமற்ற தன்மை முதவியன அடங்கும்.
3. வியப்பு (Fascination) கவர்ச்சி, ஈர்ப்பு, சொல் செயல், எல்லாமே வியப்பானது. ஒருதரம் கண்டால் கேட்டால் திரும்பத்திரும்பக் காணவேண்டும், கேட்க வேண்டும் போலிருப்பது.

பிரசாந்தி நிலையத்தில் வசிக்கும் அடியார் சுபராவோ (Subha Rao) 1998இல் நடைபெற்ற சாயி நிறுவனத் தலைவர்களின் சம்மேளனத்தில், அவதாரத்தின் ஏழு மகிமைகளைக் குறிப்பிட்டுள்ளார். அவையாவன :

1. நிபந்தனையற்ற அளவிலா அன்பு,
2. அற்புதங்கள்
3. கிரகிக்க முடியாத வைத்திய அற்புதங்கள்,
4. எல்லாம் அறிந்தவர்
5. எங்கும் வியாபகமானவர்
6. வியக்கத்தகு தலைமைத்துவ, முகாமைத்துவ இயல்புகள்.
7. மனிதனை உன்னத நிலைக்கு மாற்றும் சக்தி

இதன் கீழ் சுவாமி தனது ஏழு செயற்பாடுகளையும் கூறியுள்ளார்.

1. சாதி மத இனபேதமின்றி எல்லோரையும் ஈர்த்தல்
2. தமஸ்குணத்தில் சோம்பேறியாக இருப்பவனை உசுப்புதல்
3. ராஜஸ் குணத்தில் இருப்பவர்களின் செயற்பாடுகளை வழிநடத்தி தன்னலமற்றதாக மாற்றுதல்.
4. நல்லவர்களை, சாதுக்களை மேன்மேலும் உயர்த்துதல்
5. மனிதனிலுள்ள தீயதை அகற்றல்
6. பக்தர்களுக்குத் தரிசனம் அல்லது காட்சி கொடுத்தல்
7. அன்புடன் தன்னலமற்ற சேவை

பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா ஓர் அவதாரம். அவர் எம் மத்தியில் உலாவுவது எமது பாக்கியம். அருள் பொலியும் இந்தப் பிரேம அவதாரத்தை வணங்கிச் சரணடைவோம்.

**திருமதி சியாமளா ரவீந்திரன்**

**உசாத்துணை நூல்கள் :**

சத்தியம் சிவம் சுந்தரம் - பா III. "இறைதூதன்" பத்திரிகை : மார்கழி 2001

"ஜெய் சாயி ராம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவாமியின் பிரகடனங்கள்:

**23.05.1940 :** " நான் சாயி பாபா. நான் ஆபஸ்தம்ப சூத்திரத்தையும், பாரத்வாஜ கோத்திரத்தையும் சேர்ந்தவன். உங்கள் மனதையும் இல்லத்தையும் சுத்தமாகவும் தூய்மையாகவும் வைத்திருங்கள். வியாழக்கிழமை தோறும் என்னை வணங்குங்கள்"

ச.சி.சு : பா 1; ப.58

**20.10.1940 :** "நான் இனிமேல் உங்கள் சத்தியா அல்லன். நான் சாயிபாபா. நான் போகிறேன். நான் உங்களுடைய உறவினன் அல்லன். மாயை நீங்கிவிட்டது. என்னுடைய பக்தர்கள் என்னை அழைக்கிறார்கள். எனக்கு வேலை இருக்கிறது நான் இங்கு இருக்கமுடியாது" என்று கூறி வீட்டைவிட்டு வெளியேறினார்.

ச.சி.சு : பா 1; ப. 64

"சாதாரணமக்கள் என்னை அறிந்து கொள்ள வேண்டுமென்றால். அவர்கள் மத்தியில், அவர்களுடைய உருவத்திலே வந்து, அவர்களது மொழியில் பேசினால்தான் முடியும். இது எதுபோலெனில், தண்ணீரில் வீழ்ந்து மூழ்கும் ஒருவனைக் காப்பாற்றவேண்டுமென்றால், காக்க விரும்புவன் தானும் அத்தண்ணீருக்குள் பாய்ந்துதானே ஆகவேண்டும்."

ச.சி.சு : பா 1; ப.79

**29.06.1959 :** யந்திரம் ஒன்றைத் தாட்டு, ஆலமரம் ஒன்றை நாட்டி (தியான மரம்) ; "ஒரு குறிப்பிட்ட யோகநிலையை அடைந்த தபஸ்ஸிகளும், முனிவர்களும் இந்த ஆலமரத்தடிக்குத் தாமாகவே வருவார்கள். அப்போது இது தபோவனம் என்ற பெயரைப் பெற உரிமை பெறும்" ச.சி.சு : பா 1; ப. 115 (ஓம் ஸ்ரீசாயி சாதக அனுக்கிரக வட்டவிருக்ஷ பிரதிஸ்தாபகாயநம:)

**நவம்பர் 1949 :** "நான் எல்லோருடைய சேவகனே. என்னை எந்தப் பெயரிலழைத்தாலும் அவன்முன் வருவேன். எல்லா நாமங்களும் என்னுடையவையே. நீ என்னை ஒதுக்கித் தள்ளினாலும், கைவிடப் போவதில்லை. எப்பொழுதும் உன் பக்கத்திலேயே இருக்கின்றேன். எல்லோருமே இறைவனால் இறைவன் பொருட்டே வாழ்கிறார்கள். சூரியன் இல்லையென்று ஒருவன் சொல்லுவதால், சூரியன் இல்லாமற் போய்விடுவதில்லை"

ச.சி.சு : பா 1; ப.129.

சென்னையில் சுவாமியின் முன்னிலையில் பேச்சாளர் ஒருவர் அவையோரைப் பார்த்து "புட்டபர்த்திக்குச் சென்று பிரசாந்தி நிலையத்தில் நடக்கும் பஜனையில் கலந்து கொள்ள வேண்டும்." என்று சொன்னதற்கு, பகவான் உடனே; "இல்லை, இல்லை, நீங்கள் இருக்கும் இடத்திலேயே இருக்கலாம். நான் உங்கள் இடத்திற்கு வருவேன். உங்களால் முடியாத செலவை இதன் பொருட்டு மேற்கொள்ள வேண்டாம். நீங்கள் என்னை அழைத்தால் உங்கள் பக்கத்தில் அப்பொழுதே வந்திடுவேன்" என்று திருத்தினார்.

ச.சி.சு : பா 1; ப. 141

"இறைவனுடைய கையில் எவ்வித பொருளாக விளங்க ஆசைப்படுகிறாய் ? புல்லாங்குழலாக விளங்க ஆசைப்படுகிறேன் என்பதுதான் பொருத்தமான மறுமொழி." ச.சி.சு : பா 1; ப. 153

"பூமியை ஆகாயமாகவும், ஆகாயத்தைப் பூமியாகவும் மாற்றும் ஆற்றல் என்னிடம் இருந்தாலும், என்னை நாடி வேண்டுவோர்க்கு, அவரவர் விரும்பியதைத்தான் கொடுக்கிறேன்."

ச.சி.சு : பா 1; ப.163

"சாயிபாபாவாக எவர் அவதரித்தாரோ, அவரேதான் சத்திய சாயிபாபாவாக வந்திருக்கிறார். சாயி அவதாரங்கள் மூன்று ஒன்றன் பின் ஒன்றாக வருபவை. இந்த அவதாரத்திற்குப் பிறகு, கர்னாடகத்தில் பிரேம சாயியாக அவதரிப்பேன்"

ச.சி.சு : பா 1; ப.215


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முன்னைய அவதாரத்தில் தீய குணங்களைக் கண்டு கோபப்பட்டது போல, இவ்வவதாரத்தில் கோபப்படுவதில்லை. உதாரணமாக; தாயார் சமயலறையில் சமைக்கும்போது, குழந்தைகள் தடையாக இருந்தால் அவர்களிடத்தில் கண்டிப்பாக விருப்பார். ஆனால் சமைத்த உணவைப் பரிமாறும் பொழுது, ஆனந்தமும் பொறுமையும் உருவான வாளாகக் காணப்படுவாள். முன்னைய அவதாரத்தின் போது உணவு சமைத்தேன். அதனால் உங்களிடம் கண்டிப்பாக இருந்தேன். இப்பொழுதோ சமைத்த உணவைப் பரிமாறுகிறேன். நீங்கள் எங்கிருந்தாலும் பக்தியுடன் கோப்பையை முன்னால் வைத்து அமருங்கள், நீங்கள் திருப்தியடையும் வரை அன்போடு பரிமாறுவேன்" ச.சி.சு : பா 1; ப.232

"ஆயிரம் பேர் வேண்டினாலும், இழுத்தாலும், தள்ளினாலும் நான் அழைக்காமல் ஒருவரும் என்னிடம் வர முடியாது" ச.சி.சு : பா 1; ப.251

"பிரசாந்தி நிலையத்திற்கு வாருங்கள். வந்து என்னோடு தங்கிப் பேசி, என்னை நன்கு கவனித்த பின்னர் முடிவுக்கு வாருங்கள். இறங்கி ஆழத்தை அறியுங்கள். அருந்திச் சுவையை அறியுங்கள்."

ச.சி.சு : பா 1; ப.272

சுவாமி தனது பூதவுடலைவிட்டுப் பல தடவை போய் வந்துள்ளார். "இது என்கடமை, நான் எங்கிருந்தாலும், எதில் ஈடுபட்டிருந்தாலும், பக்தர்கள் அபயக்குரல் எழுப்பும் போது அவர்களுக்கு உதவி அளிக்கப் போயே ஆகவேண்டும்"

"என்னுடைய செயல்களுக்கு விளக்கம் தர முயற்சிப்பதில் உங்கள் காலத்தையும் சக்தியையும் வீணாக்காதீர்கள். முதலில் உங்களையும் உங்கள் இயல்புகளையும் உணர்ந்து கொள்ள முயலுங்கள். அதுவே என்னைத் தெரிந்து கொள்ள உண்மையான வழியாகும்." ச.சி.சு : பா 1; ப.299

**6.07.1963** : "**நான் சிவ சக்தி**. பாரத்வாஜர், சிவன் சக்தி ஆகியோரிடம் பெற்ற வரத்திற்கேற்ப பாரத்வாஜ கோத்திரத்தில் பிறந்தேன். சிவன் அக்கோத்திரத்தில் ஷீர்டி சாயிபாபாவாகப் பிறந்தார். இப்பொழுது அதே கோத்திரத்தில் சிவ சக்தி அவதாரம் எடுத்துள்ளது. வருங்காலத்தில். இதே கோத்திரத்தில் மைசூர் மாகாணத்தில் சக்தி, பிரேம சாயியாக அவதரிப்பார்"

ச.சி.சு : பா2 ; ப.109

"இறைவன் எடுக்கும் அவதாரங்கள் ஒவ்வொன்றுக்கும் கோயில் கட்டவேண்டியதில்லை. எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் அவரை அழைக்கலாம். பழங்காலக் கோயில்கள், தலைமுறை தலைமுறையாக, உண்மையான பக்தர்களின் பக்தியாலும், பிரார்த்தனையாலும் நிரம்பப்பட்டுள்ளன. இப்படியாகச் சேமித்துவைத்த மூலதனத்தை மறுப்பது அழகல்ல"

ச.சி.சு : பா2 ; ப.209

"விவேகானந்தர் திரும்பவும் வந்துள்ளார். சிறிலங்காவில் வளருகின்றார். அவர் என்னிடம் வந்து என்னுடைய வேலையில் பங்கு கொள்ளுவார்."

ச.சி.சு : பா2 ; ப.174

"நான் வேறு ஒருவர் மூலமாக ஒரு போதும் பேசமாட்டேன். என்னை வெளிப்படுத்திக்கொள்ள, இடையில் எந்தச் சாதனத்தையும் வைத்துக் கொள்ளமாட்டேன். நான் என்ன பேயா? பிசாசா? இடையில் ஒருவரை வைத்துப் பேசுவதற்கு? நான் நேராகவே வருவேன். நேரில் வந்தே பேசுவேன். நான் சிருஷ்டிக்கும் பொருட்கள் மூலம் என் வருகையை அறிவிப்பேன். நான் வரங்களை நேரடியாக அருள்வேன். அதற்காக ஒரு இடைச்சாதனத்தை உபயோகிக்க மாட்டேன்".

ச.சி.சு : பா 2 ; ப.251

"எங்கும் நிறைந்த பரம்பொருள் மனித உருவில் வருவது எவ்வளவு உயர்ந்த நிலையென்று நீங்கள் கருதலாம். என்னிலையில் நீங்கள் இருந்தால் மட்டுமே இதனால் உண்டாகும் துன்பங்களை உணரமுடியும். உங்களுடைய இறந்த, நிகழ், வருங்காலங்கள் அனைத்தையும் நான் அறிவேன். ஆதலில் நீங்கள் கேட்டவுடனே கேட்பனயாவற்றையும் இரக்கங்காட்டி அளிக்கமுடியவில்லை. உங்களுக்கு மகிழ்ச்சியைத் தருவதும். துன்பத்தைத் தருவதும் நானல்ல. உங்கள் செயல்களில் பலன்களே."

ச.சி.சு : பா 2 ; ப.269


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்த சொரூபனான நான், என்றைக்கும் ஆனந்தமாகவே இருக்கிறேன். என்னைப் புகழ்பவர்களைப் பார்த்தும் புன்னகை புரிகின்றேன். இகழ்வர்களைப் பார்த்தும் புன்னமை புரிகின்றேன். என்மேல் அபவாதமாக ஏதாவது சொல்லுவதன் மூலம் சிலர் மகிழ்ச்சியடைகிறார்கள். அவர்களுடைய ஆனந்தத்தைப் பார்த்து நீங்களும் ஆனந்தப்பட வேண்டும். ஆனந்தம் தருவதே என் நோக்கம். இந்தத் தீமையிலும் ஒரு நன்மை இருக்கிறது. தானியத்தைச் சுளகில் இட்டுப் புடைக்கும்போது பதரும் உமியும் நீங்கி நல்ல தானியங்கள் தனித்து நிற்பது போல, இந்த மனிதர்கள் பொய்மை என்னும் சுளகால் தூற்றும் போது வேரற்ற செடிகள் மென்மையான தென்றலுக்கு வீழ்ந்துவிடுவது போன்று, நம்பிக்கை என்னும் அடித்தளம் அற்றவர்கள் சிதறிப்போய்விடுவார்கள். உண்மையான பக்தியும், திடமான நம்பிக்கையும் உடையவர்கள் நிலைத்து நிற்பார்கள்''

ச.சி.சு : பா 2 ; ப.279

''இந்த உலகம் முழுவதும் என் மாளிகை. ஒவ்வொருநாடும் அதில் ஓர் அறை''

ச.சி.சு : பா 2 ; ப.306

**23.11.1967:** ''இன்று என்னுடைய பிறந்த நாளல்ல. எனக்குப் பிறந்த நாளோ இல்லை. எனக்கு வயது வரம்பு இல்லை. நான் நிரந்தரமானவன். பற்றை உதறிய நாளை, ஞானம் உதயமான நாளை பிறந்த நாளாகக் கொண்டாடுங்கள். நீங்கள் நானாக மாறும்போது, அதன் மூலம் பேரானந்தத்தை எய்தும் போது, அந்த நாளை, பெருமைமிக்க நாளாக, பிறந்த நாளாகக் கொண்டாடி என்னை வணங்குங்கள்''

ச.சி.சு : பா 2 ; ப.348

**''இந்த முழு உலகமும் என்னைத் துதிப்பதை நீ விரைவில் காண்பாய்''**

ச.சி.சு : பா 2 ; ப.353

(சுவாமி தனது உடலை 95 வது வயதில் 2021 ஆம் ஆண்டு நீக்குவாரென்றும் அதற்குச்சில வருடங்களுக்கு முன்பு இஸ்லாமியர்களும் பெருமளவில் தன்னை ஏற்றுக் கொள்வார்களென்றும் கூறியுள்ளார்)

''நான் மனிதனல்ல. தேவன் அல்ல. தேவதூதனோ. தேவதையோ அல்ல. நான்குவித வருணத்தில் எதையும் சேர்ந்தவனல்ல. நான் மனித வாழ்க்கையின் நான்கு நிலைகளில் எந்த நிலையையும் சேர்ந்தவனல்ல. நான் சத்தியத்தை உபதேசிக்கும் குரு. நான் **சத்தியம் சிவம் சுந்தரம்.**''

ச.சி.சு : பா 3; .முகவுரை

''என்னிடம் சரணடைந்தவர்களின் துன்பத்தை, வியாதியை என்மேல் ஏற்றுக் கொள்வது எனது கடமை. எனக்குத் துன்பமேயில்லை. ஆகையினாலே நான் எனது கடமையைச் செய்யும் பொழுது நீங்கள் வருந்தத்தேவையில்லை.''

**''கடவுளைக் கண்டாயா என்று கேட்டால், கடவுளைக் கண்டேன் என்று சொல்லுங்கள்''**

25.12.1970 அருளுரை.

''என் செயல்கள் தெய்வீக சக்திக்கான சான்றுகள். தெய்வீகத்தின் அடையாளங்கள். பிரேமையின் தூண்டுதலால் பொருட்களை வழங்குகிறேன். என் பிரேமை வற்றாதது. எனக்கு எந்தவிதமான விருப்பமுமில்லை. நான் அன்பைப் பற்றிப் பேசுகிறேன். அன்பின் வழியில் அழைத்துச் செல்லுகிறேன். அன்பே நான்.''

ச.சி.சு : பா 3 ; ப.216

**20.10.1969 :** '' கடவுள் கடின இதயம் படைத்தவர். பிரார்த்தனைக்கு செவிசாய்க்கவில்லை. தமது படங்களில் அவருடைய அனுக்கிரகத்தைக் காட்டும் அடையாளங்களைத் தோற்றுவிக்கவில்லை. ஆறுதல் தர, உறுதிகூற அசரீரியாகப் பேசவில்லை யென்றெல்லாம் குறை கூறுகிறீர்கள். நான் சொல்லுவதைக் கேளுங்கள். கடவுள் அன்பு ருவானவர். அன்பே இறைவன். இறைவன் உங்கள் பிரார்த்தனைக்குச் செவிசாய்க்க வில்லையென்றால் உங்கள் பிரார்த்தனை இதய ஆழத்திலிருந்து வரவில்லை, அந்தப் பிரார்த்தனை வெறும் நடிப்பு, கபடம் நிறைந்தது என்றே கொள்ள வேண்டும். கடவுள் உனக்கு மிகவும் நெருங்கிய மிகுந்த அன்பு கொண்ட உறவினர்.''

ச.சி.சு : பா 3 ; ப.273


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“மனதை வெல்வதே ஆண்டுக் கணக்கில் யோக சாதனை செய்வதன் நோக்கம். உங்கள் ஆணவம் உங்களைச் சிறைப்படுத்தியிருக்கிறது. அதிலிருந்து விரைவாகவும் பாதுகாப்பாகவும் நீங்கள் தான் விடுவிக்க வேண்டும். ஆனால் பெரும் பாலானோர் முக்திக்கான சாவியை என்னிடம் கேட்பதில்லை. நீங்கள் என்னிடம் அற்பமான கிலுகிலுப்பைகளையும் லாபங்களையும் கேட்கிறீர்கள். மிகச் சிலர்தான் நான் கொடுக்க விரும்புவதை, முக்தியை என்னிடம் பெற விரும்புகின்றனர். இவர்களிலும் சிலரே சாதனை மார்க்கத்தை அக்கறையுடன் பின்பற்றுகின்றனர். இவர்களிலும் ஒரு சிலரே வெற்றி பெறுகின்றனர்”

ச.சி.சு : பா 4; ப.141

“நான் ஒருவரின் கனவில் தோன்றுவது, அவருக்குரிய தகவலைத் தெரிவிப்பதற்கேயாகும். இது நீங்கள் காணும் சாதாரண கனவு அல்ல. கனவில் அனுபவிக்கும் நிகழ்ச்சிகளை கற்பனையென்று விளங்கவேண்டாம். நான் கனவில் வந்து உங்கள் சந்தேகங்கள் அனைத்திற்கும் விடையளிக்கின்றேன்.”

ச.சி.சு : பா 4 ; ப.148

பக்தர்களின் தபால் தந்திகளைப் பற்றி:

“தந்தியோ தபாலோ எண்ணத்தின் பிரதியேயாகும். அதில் அடங்கியுள்ள எண்ணம் இதயபூர்வமாகின், எண்ணம் உதித்த உடனேயே அது என்னை அடைந்துவிடும். அத்துடன் அதற்கு வேண்டிய வழிகாட்டலும் அனுப்பப்பட்டுவிடும்”

ச.சி.சு : பா 4 ; ப.165

“இருப்பது ஒரு சாதி ; அதுமனித சாதி
இருப்பது ஒருமதம் ; அது அன்பு மதம்.
இருப்பது ஒரு மொழி ; அது இதய மொழியாகும்
இருப்பது ஒரு இறைவன் ; அவர் எங்கும் நிறைந்தவர்”

ச.சி.சு : பா 4 ; ப.35

**22.11.1969 :** ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவன நிர்வாகிகளுக்கு; “அனைவரிடமும் அன்பு காட்டுங்கள். ஒற்றுமையாகப் பணி புரியங்கள். ஆன் மீகப் பயிற்சிக்கான அழைப்பே உன் பதவிப் பொறுப்பு. என் நேரடிப் பார்வையில், என் நிர்வாகத்தின் கீழே நீ இருக்கிறாய் என்பதற்கான எச்சரிக்கையே உன் பதவி”

ச.சி.சு : பா 3; ப.281

**23.11.1969 : “ என்னை நோக்கி மனித குலத்தை அழைத்துச் செல்ல மனித வடிவில் தோன்றிய சிவ சக்திசொரூபன் நான். நானிருக்கப் பயமேன்”**

ச.சி.சு : பா 3 ; ப.282

**பெப் 1970 :** “முதியவர்கள் குழந்தைகள், நோயாளிகள் துயரமுற்றவர்கள் ஆகிய அனைவரும் நானே. அவர்களின் உருவில் உள்ள எனக்குச் சேவை செய்யுங்கள்.”

ச.சி.சு : பா 3; ப.287

**“எனது வாழ்வே என் செய்தி”** என்று முன்னர் கூறிய பகவான் இப்போது **“உனது வாழ்வே என் செய்தி”** என்று பக்தர்களைப் பார்த்துக் கூறுகின்றார்.

**23.12.1971 :** “நீங்கள் ஒவ்வொருவரும் அவதாரமே. தெய்வீகமானவர்களே. என்னைப்போல் உடம்பினால் மூடப்பட்டுள்ளீர்கள். உங்களின் தெய்வீகத்தை முன்னைய பல பிறப்புகளின் வினைப்பயனால் அறியாதிருக்கிறீர்கள். நான் என் விருப்பத்தி னாலேயே மனித உருவம் எடுத்துள்ளேன். நீங்களோ முக்குணங்களாலும் உங்களது உடம்போடு பிணைக்கப்பட்டுள்ளீர்கள். நானோ அக்குணங் களுக்கப்பாற்பட்டவன். அக் குணங்கள் மூலம் என்னுடன் பிணைக்கவே செயற்படுகின்றேன்”

ச.சி.சு : பா 3 ; ப.466

“நான் ஒரு புதிய மதத்தை ஸ்தாபிக்கவோ. அல்லது இருக்கும் மதங்களைக் குழப்பவோ வரவில்லை. ஒவ்வொருவரையும் அவரவர் மதத்தின் அடிப்படையை விளங்கவைத்து அவரவர் மதத்திலேயே முன்னேறச் செய்வதுதான் எனது நோக்கம்”

**பக்தர்களைநோக்கி:**

“உங்களின் பணி தொடங்கிவிட்டது. நான் சொல்வதைக் கேளுங்கள். ஒவ்வொருவருக்கும் இதில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகத்தான பங்குண்டு. எனது அழைப்புக் கிடைத்தவர்களே எனக்குச் சேவை செய்யலாம். உங்கள் அருகில் வரும் எல்லோருக்கும் உங்கள் பக்தி பரவட்டும். பணிசெவ்வனே செய்து முடிய சதா என்னிலே மனதைப் படிய வையுங்கள். பணியின் பலனில் ஆசை கொள்ளவேண்டாம்.

எனது பணி மிகவும் அமைதியாகவே தொடரும். எனது கருவியான உங்கள் மூலமே என் அன்பு பாயும். ஆனால் ஆணவம் தலைகாட்டத் தொடங்கியதும் எனது பணி தடைப்பட்டுவிடும்.

எனது பணிக்கோ முடிவில்லை. அதேபோல் உங்களது பணிக்கும் முடிவில்லை. நான் உங்கள் உள்ளேயும் வெளியேயும் இருக்கிறேன். அற்ப விடயங்களைப்பற்றி அக்கறை கொள்ளவேண்டாம். நீ என் உள்ளே ; அதேபோல நானும் உன் உள்ளே. எனது தரிசனம் உங்களினூடாக இருந்தால் மனிதகுலம் உங்களால் மிகவும் பயனடையும். இன்னும் பலர் என்னால் இழுக்கப்படுவார்கள். எல்லா உயிரினங்களும் ஒற்றுமையாகவும் ஒத்தாசையுடனும் வாழும் காலம் மிளிரப் போகின்றது. இது நம்பமுடியாதளவிற்கு மிகவும் குறுகிய காலத்தில் நிகழப்போகின்றது. எனது செய்கையை சங்கல்பத்தின் மகிமையை ஒருவராலும் கிரகிக்க முடியாது. பணியை அமைதியாகச் செய்யும் உங்களை எனது இதயத்துடன் அணைத்து, உங்களின் ஆன்மீகத்தை ஏழுப்பி, உங்கள் கண்கள் என்னைக் காட்டும் வண்ணம் செய்வேன்.

"எனது பணியில் பங்கு கொள்ளுங்கள். தொடர்ந்து செய்யுங்கள். பரலோகத்தின் வாசனை உங்கள் மூச்சில் மிதந்து வரும். தேவதைகளைப் போல் விளங்குவீர்கள். உங்களின் ஆனந்தமே எனது ஆனந்தம்." (Finding of Grd by Charles Penn 1979.p177).

**23.11.1994 :** " இன்றைய நன்னாளில் சுவாமிக்கு நைவேத்தியமாக மூன்று கெட்ட குணங்களைக் – **மது அருந்துதல், புகைத்தல், புலாலுண்ணல் – கொடுங்கள்.** இம் மூன்றையும் கைவிடுவதால், நீங்களும் சமூகமும் தேசிய இனமும் நலனடையும். நாளைக்கென்று தள்ளிப்போடவேண்டாம் இக்கணத்திலேயே கை விடுங்கள்"

அருளுரை 23.11.1994.

"ஜெய் சாயி ராம்"

ச.சி.சு: சத்தியம் சிவம் சுந்தரம்.
பாகம் 1, 2, 3, 4

தொகுத்தவர்
ஆசிரியர்

"பஞ்ச பூதங்கள் உன்னுள்ளேயும் உள்ளன. உன்னிடம் இல்லாதது மற்றவரிடத்திலும் இல்லை. அப்படியிருக்கும் போது மற்றவரிடம் நீ ஏன் கையேந்த வேண்டும்? உன்னிடம் இல்லாத எதைக் கேட்கிறாய்?. அனைத்தும் சமம்தான். இந்த ஒற்றுமைதான் தெய்வீகம். இந்த ஒற்றுமைதான் மோட்சத்தின் அடிப்படை. நாம் வேற்றுமையில் ஒற்றுமையுக் காணவேண்டும்.

ஸ்ரீ சத்திய சாயி பாபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் ஸ்ரீ சாயி ராம்"

# அவதார நோக்கம்

## 1. முன்னுரை

* மனிதனில் உள்ளுறையும் தெய்வீகத்தை வெளிப்படுத்தவே வந்துள்ளேன். – பாபா

* தெய்வீக அன்பு சொரூபிகளே !
தெய்வீக ஆனந்த சொரூபிகளே !
தெய்வீக ஆத்ம சொரூபிகளே !
என்றுதான் பகவான் எங்களை அழைக்கின்றார். எந்த அன்புக்காக எந்த ஆனந்தத்திற்காக, எந்த தெய்வீகத்திற்காக நாம் ஆலாய்ப் பறக்கிறோமோ அந்த அன்பு, அந்த ஆனந்தம், அந்த தெய்வீகம் நாம் ஒவ்வொருவரும் என்று சொல்கிறார்.

* நானும் நீயும் ஒன்று என்கிறார். சித்த மலம் அறுவித்து சிவமாக்கி எமை ஆள வந்துள்ளார். சிந்தைதனைத் தெளிவித்து சிவமாக்கி எமை ஆள வந்துள்ளார்.

## 2. அழைப்பு

* பொய்யிலிருந்து, அசத்தியத்திலிருந்து அன்றும் இன்றும் என்றும் உள்ள பொருளான சத்தியத்திற்கு எம்மை அழைக்கிறார்.
* இருளிலிருந்து, அஞ்ஞானத்திலிருந்து, அறியாமையிலிருந்து மாயை என்ற மயக்கத்திலிருந்து ஒளிக்கு, பேரறிவுக்கு, ஞானத்திற்கு எம்மை அழைக்கின்றார்.

மாயை எம்மை விட்டகலாது. ஞானம் எமக்குத் தூரத்திலுள்ளது என்று நாம் நம்மைக் கீழ்மைப்படுத்தும் போது
மாயை போனால் வராது
ஞானம் வந்தால் போகாது
ஆத்ம தத்துவம் போக்கும் வரவும்
அற்றது என்று உற்சாகப்படுத்துகிறார்.

* அழிவிலிருந்து, இறப்பிலிருந்து அழியாமைக்கு, அமரத்துவத்திற்கு எம்மை அழைக்கிறார்.
* அந்தப் பரிபூரணம் எங்களையும் எங்கள் உண்மைத் தன்மையான பூரணத்துக்கு அழைக்கிறது.
* அந்தச் சமுத்திரம், அந்தப் பேராறு, அந்தப் பெருங்கருணை இந்தத் துளியை, இந்தச் சிறிய தேக்கத்தை அழைக்கிறது.
* அந்த பெரும் நெருப்பு இந்தப் பொறியை அழைக்கிறது.
* அந்தத் தெய்வம், தானும் தெய்வம் என்று தெரியாது தத்தளிக்கும் எங்களை நீங்களும் தெய்வம் என்று தெய்வீகத்திற்கு அழைக்கிறது.
* என்னில் தெய்வீகம் வெளிப்படையாக இருக்கிறது. அது உன்னில் மறைமுகமாக இருக்கிறது. அதை நீ வெளிப்படுத்த வேண்டும் என்னைப் பார். நீயும் அப்படி ஆக வேண்டும் என்று எம்மை அழைக்கிறது.

## 3. எப்படி?

* உன்னுடைய உண்மை இயல்பு அது. நீ வெளியிலும் வெளி ஆரவாரத்திலும், அந்தப் பரபரப்பிலும் உன்னுடைய உண்மையை மறந்துவிட்டாய். அமைதியாக, ஆரவாரமற்று வெளிமயக்குகளிலிருந்து உன்னை அறுத்துக் கொள்ளும் பொழுது
அன்று உனக்கு அருளப்படும்,
இருள் அகற்றப்படும்.
உள்ளத்தில் அந்த உண்மை ஞாயிறு மேலோங்கும். அந்தத் தன்மையை நீ நினைப்புக்கள் அறும்பொழுது பெற்றுக் கொள்ளலாம்.
* பொய்யாயின எல்லாம் போகும் பொழுது உன்னுடைய மெய்யான மெய் தானாகத் தலையெடுக்கும்
* பொய் என்ற உன்னை மூடியுள்ள சாம்பலை ஊதி அகற்றும் பொழுது உண்மை சுடர்விடும்.

## 4. அந்த உண்மை என்ன?

* "ஏகம் சத் விப்ரா பகுதா வததி", உண்மை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றுதான். அதை அறிந்த ஞானிகள் அதைப் பலபட விளக்கியுள்ளார்கள்.

* "ஏகோஹம் பஹுஸ்யாம்" ஒன்றான நான் என்னைப் பலவாக்கிக்கொண்டேன். என்னுடைய அன்பை, என்னுடைய ஆனந்தத்தை, என்னுடைய தெய்வீகத்தை நான் அனுபவிக்க விரும்பினேன். என்னை நான் பலவாக்கிக் கொண்டேன். நீயாக, அவராக, அவளாக, அதாக இதாக எல்லாமாகவும் என்னை ஆக்கிக் கொண்டேன். நீ என்றால் யாருமல்ல நான்தான்
* "ஏகம் ஏவா அத்வீதீயம் ப்ரஹ்மா", ஒன்று மட்டும் தான் (உள்ளது) என்று சொல்லி முடிக்காமல் ஐயத்திற்கு இடம் வைக்காமல் ப்ரம்மம் என்பது இரண்டாக இல்லாதது என்று அழுத்தமாகக் கூறப்பட்டுள்ளது.
* ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலகாய் நின்றது. அருவமும் உருவுமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய் நின்றது.

## 5 ஏற்றுக்கொள்ள வேண்டிய முக்கிய உண்மை

ஒன்றுதான் உள்ளது ஒன்றைத் தவிர இங்கு ஒன்று இல்லை. அந்த ஒன்றோடு நாம் எம்மை இணைக்க வேண்டும்.

* இந்த உண்மையை நாம் ஏற்றுக்கொள்ளும் பொழுது அந்த உண்மைக்கு கிட்ட ஒரு அடி எடுத்து வைக்கிறோம். பின்பு இதை விளங்கிக் கொள்ள முழு முயற்சி எடுக்க வேண்டும். அது எமது பிரார்த்தனை ஆக வேண்டும்.
* இதைத்தான் அந்த ஒன்று என்ற தன்மை (Unity) எம்மில் உதயமான பொழுது தூய்மை தானாக ஏற்பட்டு (Purity) தெய்வீகம் (Divinity) மலரும்.
* சுவாமி இவற்றை எம்மிடம் மூன்று வாக்குறுதிகளாகக் கேட்கின்றார்.
    1. கடவுளின் இருப்பில் அந்த ஒன்றில், அந்த மாறாத உண்மையில் திடமான நம்பிக்கை வைக்க வேண்டும்.
    2. அந்த நித்தியத்தை உண்மையை நீங்கள் அனுபவிக்க வேண்டும்.
    3. அந்த ஒன்றோடு நீங்கள் ஒன்றாக வேண்டும். இந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற பூரணமான முயற்சி செய்ய வேண்டும். பலவாக, சிதறி உள்ள இந்த வேற்றுமையில் உள்ள ஒற்றுமையை, ஒன்றை நீ காண வேண்டும்.

## 6. ஏன் எங்களால் முடியவில்லை?

* கடவுள் என்ற பதம் எம்மைக் கடந்தது, எமக்கு அந்நியமானது என்று நினைத்துவிட்டோம்.

புறத்தார்க்குச் சேயோன்,
வெளியிலே, அந்நியம் என்று நினைப்பவர்க்கு தூர உள்ளவன்; பிரிவிலா அடியவர்க்கு என்றும் வாராத செல்வம் வருவிப்பவன்; பிறிவறியாத அன்பர் எல்லையில்லாத செல்வம் பெற்றவர்கள்.

* கூர்ந்த மெஞ்ஞானத்தைக் கொண்டு உணர வேண்டிய ஒன்றை, நாம் உறவு முறைகளை வைத்து சம்சாரக் கண்கொண்டு பார்த்து உயர்வான தெய்வீகத்தை இழுத்து மட்டுப் படுத்திக் கொண்டோம்.
* சிருஷ்டியின் படைப்பின் சரியான காட்சியைக் காணக் கூடியதாக எமது உள்ளார்ந்த அனுபவத்தை வளர்த்துக்கொள்ளவில்லை.
* தன் கருணைக் கண்ணைக் காட்டவும், அல்லது அதைக் காண எமது கண்களை நாம் பக்குவப்படுத்த வில்லை.

## 7. எமது உணர்வுகள்

* எங்கள் கண்களை, எமது புலன்களை, எமது உணர்வை சாதாரண உயிர்வாழும் உயிரினம் ஒன்றின் உணர்ச்சிகளுக்கு அமைவாக வைத்திருப்பதோடு திருப்திப்பட்டுக்கொண்டோம். (Conscious)
* எமது உணர்வுகளை மனச்சாட்சியினால் நெறிப்படுத்தத் (Conscience) தவறிவிட்டோம். இதனால் பேருணர்வின் வெவ்வேறு உயர்ந்த (Consciousness) நிலைகளுக்கு அந்நியமாகி விட்டோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**8. இதற்கு வழி என்ன?**

* நீ கடவுளின் திருவுருவம் . உன்னை அந்த எல்லையற்ற தன்மை, மகிமை, பெருமை என்ற நினைவுகளால் நிரப்பிக்கொள்.
* கடவுள் வேறு எங்குமில்லை. நீயேதான்
* இதை அடைய தீவிர சிரத்தையும் பேராவலும் இருந்தால், பகவான் சொல்லும் முக்கியமான கருத்தை ஒரு நிலைப்பாட்டுடன் கேட்க வேண்டும். அந்த பக்குவத்துடன் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

**9. பகவான் தரும் ஐந்து மந்திரங்கள்**

* நானே கடவுள். நான் கடவுளினின்றும் வேறுபட்டவனல்ல
* நான் எல்லையற்ற பெருமை கொண்ட பரப்பிரம்மமாவேன்
* கவலைகளும் இன்னல்களும் என்னைப்பாதிக்க விடமாட்டேன்
* சத்சித் ஆனந்தம் என்னிடமிருந்து வேறுபட்டதல்ல அது என் இயல்பே.
* நான் எப்போதும் திருப்தி நிறைந்தவனே

**10. இதை வழிபாடாகக் கொண்டால்**

* பயத்திற்கு இடமில்லை
* இது உங்களைக் காப்பாற்றும், உயிரூட்டும் உயர் சக்தி
* எமது "தியோ யோந பிரசோதயாத்" என்ற பிரார்த்தனை, எமது புத்தியைப் பிரகாசிக்கச் செய்து இந்த உண்மைக்கு உரித்தாகட்டும்
* வாழ்வின் இலக்கு எமக்கு தெற்றெனத் தெளிவாகட்டும்.
* பேறறிவின் படிகளில் இது எம்மை உயர்த்தட்டும்

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"

"ஜெய் சாயி ராம்"

**மு.க.சிவபாதவிருத்யர்**
**ஆன்மீக இணைப்பாளர்,**
**வட பிராந்தியம்.**

"மனம் தூய்மை பெற்றால்தான், ஒற்றுமையை உணர முடியும். இந்த ஒற்றுமை உணர்வில்தான தெய்வீகத்தை அனுபவிக்க இயலும்"

"தெய்வத்தில் அன்பு (Love for God)
பாவத்தில் பயம் (Fear of sin)
சமூக நீதி (Social justice)
இம்மூன்றும் ஆன்மீக ஈடேற்றத்திற்கு அவசியம்"

ஸ்ரீ சத்திய சாயி பாபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மை மகிழ வைக்கும் சாயி சேவை

சேவை செய்வதே ஆனந்தம். சாயி சேவை செய்வதே ஆனந்தம். சேவை என்பது மகத்தானது. அதி உன்னதமானது. அதிலும் சாயி நிறுவனத்தில் நாம் இணைந்து சேவையில் ஈடுபடும்பொழுது ஏற்படும் ஆனந்தம். அமைதி அனுபவித்துத்தான் உணர்ந்து கொள்ளலாம்.

இறைவன் படைப்பில், உலக அமைப்பில் எல்லாம் இறைவன் செயல்படி, திட்டமிட்டபடி, எதுவித குறையுமில்லாது சிறப்பாக நடந்துகொண்டே இருக்கின்றது. அப்படியாயின் எமக்கு என்ன வேலையிருக்கு ! ஏன் சேவை செய்ய வேண்டும்?

இறைவன் நடத்தும் நாடகத்தில், இறைவனுடைய பணியில் எம்மையும் ஒரு கருவியாக்கி, அதன் மூலம் எமது வாழ்வைப் புனிதமாக்கி வாழ்க்கைப் பயணத்தின் சுமையைக் குறைத்து "சாந்தி"யின் இருப்பிடத்தை அடைவதற்கு மிக இலகுவான சாதனையாக சேவை இருப்பதால் எல்லோருக்கும் சேவை அவசியமாகிறது. மேலும் சேவையை ஆன்மீக வளர்ச்சிக்காக எல்லோருக்கும் உள்ளுறையும் ஒரே கடவுளுக்குச் செய்யும் பூசையாக செய்யலாம். இதய பூர்வமாக சேவை செய்ய வேண்டும் என்ற துடிப்பு ஏற்பட்டு, சேவை செய்யாமல் என் பொழுது வீணாகப் போகிறதே என்ற ஏக்கம் உருவாகும்பொழுது ஆன்மீகப் பாதையின் முதல் அடியை எடுத்து வைக்கிறோம். இந்த முதல் அடியை எடுத்து வைப்பதுதான் எமது முயற்சி, இந்த முயற்சி சரியாக அமையும் பொழுது , அடுத்தடுத்து வரும் அடிகளில் எம்மை நகர வைப்பார் இறைவன். மேற்குறிப்பிட்ட முதலாவது அடி சரியான முறையில் எடுத்து வைத்தால்..... என்ன சேவை செய்ய வேண்டும் என்ற திட்டம் எமது மனக்கண் முன் வந்து வட்டமிடும். போதியளவு நேரம் கிடைக்கும். அதற்குரிய ஆட்பலம் இணைந்து கொள்ளும். பணமும் வந்து சேரும். முழு அளவில் எல்லாமே இறைவனால் இனிதாக நிறைவேற்றப்படும். எனவேதான் நாம் செய்ய வேண்டியது தூய்மையான அன்புடன், மனத்துடிப்புடன் ஏக்கத்துடன் பிரார்த்தனை செய்தல். **இறைவா சேவை செய்யாமல் என் பொழுது வீணாகிப் போகின்றதே ! நற்பணி செய்ய நல்வழி காட்டு !**

இறைவனுடைய திருவருளால் எங்களுக்கு சேவை செய்யும் வாய்ப்புக் கிடைத்தவுடன் அதைப் பிரசாதமாக தலை வணங்கி ஏற்று பணிவன்புடன் செய்யும் பொழுது மனச்சுமைகள் யாவும் கரைந்து போய் விடும். வீட்டு வேலைகள் இலகுவாக நிறைவேறும். முன் செய்த கர்ம வினையின் பெரும்பகுதி அழிந்துவிடும். எஞ்சி இருப்பது ஆனந்தமே. நிறைந்து விடுவது மனச்சாந்தி. எனவே நாம் மனத்தால், உடலால், பொருளால் சேவை செய்ய எம்மை தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும்.

சேவையின் அளவு, தொகை, பரப்பளவு.... எந்தளவு இருக்க வேண்டும் ! பகவான் கூறுகின்றார். நீ எத்தனை பேருக்கு புடவை கொடுத்தாய் ! எத்தனை ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்தாய் ! எவ்வளவு பணம் செலவழித்தாய் ! என்ற கணக்கெல்லாம் கடவுளுக்குத் தேவை இல்லை. வேண்டுமானால் அவற்றையெல்லாம் வருமானவரி இலாகாவுக்கு காட்டு. கடவுள் உன் தூய இதயத்தைப் பார்க்கிறார். **என்ன சிந்தனையோடு சேவை செய்தாய் என்பதைப் பார்க்கிறார்.** கடவுள் பார்ப்பது நல்ல மனம், நல்ல தரம். எண்ணுக்கணக்கல்ல, தொகை அல்ல, பரப்பளவு .அல்ல.

சாயி நிறுவனத்தில் செய்யப்படும் சேவை நல்ல மனத்துடனும், சிறப்புடனும், நல்ல தரத்துடனும் அமைய வேண்டும். பல்லாயிரக்கணக்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்கு அரைகுறையாகப் பட்டும் படாமலும் (உதவி) சேவை செய்தோம் என்றில்லாமல் சிலபேராவது பயன்படும் வகையில் சேவை அமைய வேண்டும். புட்டபர்த்தியில் அமைந்துள்ள மருத்துவமனையில் ஒரு தனி மனிதனுக்கே பல லட்சம் ரூபா செலவில் இருதய சத்திர சிகிச்சை இலவசமாகச் செய்யப்படுகின்றது. சேவை மட்டுமல்ல சேவையாளர் களின் தரத்தைப்பற்றி பகவான் "தரமற்ற செயல் புரியாத நூறு தொண்டர்கள் இருப்பதைவிட தரமான சேவை செய்யக்கூடிய ஐந்து தொண்டர்கள் இருந்தால் போதும்" என்று கூறியுள்ளார்.

ஒரு சேவைத் திட்டத்தின் மூலம் பல நன்மைகள், பல நற் செய்திகளை வெளிக்கொணரலாம். உதாரணமாக; அண்மையில் கைதடியில் அமைக்கப் பெற்ற இரண்டாவது வீடு, மலகூடம், குழாய் கிண33, 29 வயதுடைய இரண்டு பேர் தலை வளர்ந்து உடல் வளராத ஊனமுற்ற பெண்கள். தந்தை கவலையால் குடிப்பழக்கத்திற்கு அடிமையானார். தாய் பல கஷ்டங்களின் மத்தியில் பிள்ளைகளைப் பராமரிக்கின்றார். உறவினர்கள் எது வித உதவியும் செய்வதில்லை. ஆனால் சொத்திக் குடும்பம் என்று ஏளனம் செய்து அவர்களைத் தனிமைப்படுத்தி வேதனைப்படுத்துகிறார்கள். இதை அறிந்த சாயி நிறுவனத்தினர் உதவி செய்ய முன்வந்தார்கள். ஒரு அளவான வீடு, மலகூடம், கிணறு கட்டிக் கொடுக்கத் தீர்மானித்து செயலிலும் இறங்கினார்கள். தந்தையின் குடியை மறப்பதற்கும் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

தற்பொழுது அந்தக் குடும்பத்திற்கு பெரு மகிழ்ச்சி, கடவுளுடைய உதவி தங்களுக்கு கிடைத்துவிட்டது. சொத்திக் குடும்பம் அங்கவீனர்களையும் இந்த சமூகம் ஒதுக்கவில்லை. எங்களிடம் அன்பு செலுத்த பலர் இருகக்கிறார்கள். இவர்கள் மட்டுமல்ல மற்ற அங்கவீனர்களும் இந்தச் செய்தியைக் கேட்டு மகிழ்ச்சி அடைகின்றார்கள். இந்த வீடமைப்பின் மூலம் அங்கவீனர்கள் அந்தக் குடும்பம், வெளிச் சமூகம் சாயி நிறுவனங்களின் செயற்பாடுகள் சாயி போதனைகளை அறிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

எனவே எல்லோரும் சேவைப்பணியில் ஈடுபட்டு ஆனந்தம் பெற அருள்புரியும்படி இறைவனிடம் பிரார்த்தனை செய்வோம்.

"ஜெய் சாயி ராம்"

**சி.ஈஸ்வரலிங்கம்**
**சேவை இணைப்பாளர்**
**வட பிராந்தியம்.**

"மற்றவர்களுக்கு எடுத்துச் செல்ல, உபன்யாசம் செய்ய நிறைய நூல்களைப் படிக்க வேண்டும். தன் வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகுவதற்கு கொஞ்சம் படித்தால் போதும்"

ஸ்ரீ சத்திய சாயி பாபா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் ஸ்ரீ சாயி ராம்"

# வடபிராந்திய இணைப்புக் குழுவின் குறிப்பு

**சாயி தொண்டர்களின் சேவை மூன்று நிலைப்படுத்தலாம்**

↓

**அயல் கிராமங்களுடன் தொடர்பு கொள்ளல்**

1. **தனிமனித சேவை** – ஆரம்ப நிலை முதலாவது வீட்டிலிருந்து அயல் பெற்றோருக்குச் செய்ய வேண்டிய பணி. இரண்டாவது உதாரணம் :- அயலில் உதவியற்றவராக இருக்கலாம் அல்லது யாராகவும் இருக்கலாம் ஆபத்தில் உதவுதல் மருத்துவ மனைக்கு கொண்டு செல்லல் போன்று பல (இது தனியாக செயல்படும் சேவை)

2. **நிலையங்கள், மண்டலிகள்** கூட்டாகச் செயல்படுதல். நிலையங்களால் ஒழுங்கு செய்யும் சேவைகளில் பங்கு கொள்ளல்.

3. **பிராந்திய ரீதியாகப்** பரந்தளவில் சேவை செய்தல் பல பேர் இணைந்து கூட்டாகச் செய்கின்ற கூட்டுப்பிரார்த்தனை, தியானம், சேவை இவற்றிற்கு அளவு கடந்த சக்தி உள்ளது.

### அயல்கிராமங்களுடன் தொடர்பு கொள்ளல்:

1. கிராம மக்களின் வாழ்க்கை முறை, அவர்களின் பிரச்சினைகளை அறிந்து கொள்ளல்
2. எத்தனை வீடுகளில் குடிநீர் – கிணற்று வசதி இல்லை
3. எத்தனை வீடுகளில் மலசலகூட வசதியில்லை.
4. சுகாதார வசதியற்று வாழும் குடும்பங்கள்
5. உணவு , உடை, வசதியற்ற குடும்பம்
6. ஊனமுற்றோர், அவர்களின் வசதி
7. குடும்பத் தலைவன் இன்றி கஷ்டப்படும் குடும்பம் அவர்களின் பிரச்சினை
8. பெற்றோர் இழந்த பிள்ளைகள் நிலைமை
9. பிள்ளைகளால் கைவிடப்பட்ட அல்லது பிள்ளைகள் இல்லாத வயோதிபர்கள் நிலைமை
10. ஆர்வமுள்ள, கல்வி கற்க வசதியற்ற பிள்ளைகள்
11. வீட்டு வசதியற்ற வறுமையில் உள்ள குடும்பம்
12. சிறிய வீடுகள் திருத்த வசதியற்றோர்
13. நோயுற்று மருத்துவ வசதியற்றோர்.
14. கவனிப்பாரற்ற ஆலயங்கள்
15. பராமரிப்பற்ற சுடலைகள் (மயானங்கள்)
16. கிராமத்தில் உள்ள பாடசாலை, சனசமூக நிலையங்கள் விபரம்
17. பாடசாலையில் வறுமைக் கோட்டில் உள்ள பெற்றோர் இழந்த மாணவர்கள் பட்டியல்
18. உங்கள் மண்டலிகள், நிலையங்களில் பங்குபற்றும் அங்கத்தவர்கள் தொகை
19. சேவைப் பணிக்கு தயாராக அல்லது ஆர்வமாக இருக்கும் ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் பெயர் விலாசம்.

### சேவைக்குத் தடைகளாயிருப்பவை:

* சேவைக்கு முன்னுரிமை கொடுக்காமை
* அதிகமான எதிர்பார்ப்புக்கள்
* பிறரின் கூற்றுக்களை (Negative thoughts) தேவையில்லாது ஏற்றுக் கொள்ளுதல்
* பூரண கடவுள் நம்பிக்கையின்மை
* சாயியின் அருளைப் பெற துடிப்பு ஏக்கமின்மை
* மறதி, சோம்பல்
* நேரமின்மையென்ற தப்பபிப்பிராயம். சுவாமியின் வேலையைச் செய்தால், அவர் என் வேலையைச் செய்வார்.
* பணக் குறைவு
* தொண்டர்கள் எண்ணிக்கைக் குறைவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் ஸ்ரீ சாயி ராம்"

# பகவானின் வேலைத் திட்டங்களில் சில

**கல்விச் சேவை**

சத்திய சாயி பாடசாலைகள்
சத்திய சாயி வித்தியாலயம்
சத்யி சாயி மேற்படிப்பு நிறுவனங்கள்
சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வி நிறுவனங்கள்
சத்திய சாயி இசைக் கல்லூரி
சத்திய சாயி சலாச்சாரப் படிப்பகம் (Museum)
தைத்தன்ய ஜோதி படிப்பகம்
சத்திய சாயி பால விகாஸ் திட்டம்
நூல்கள் வெளியீடு

**மருத்துவ நிலையங்கள்**

புட்டப்பர்த்தியில்

சத்திய சாயி பொது வைத்தியசாலை
சத்திய உயர் மருத்துவ நிறுவனம்

**பங்களூர்**

சத்தியசாயி பொது வைத்தியசாலை
சத்திய சாயி உயர் மருத்துவ நிலையம்

இந்தியாவிலும் ஏனைய நாடுகளிலும் சத்திய சாயி சேவா நிறுவன மூலமாகப் பல கல்வி நிலையங்களும் மருத்துவ நிறுவனங்களும் நிறுவப்பட்டுள்ளன. மக்ளுக்கு அன்புடன் இலவசமாக அதி உன்னத சேவை செய்வதே முக்கிய நோக்கமாகும்.

**குடிநீர்த் திட்டங்கள்**

* இந்தியாவில், ஆந்திரா பிரதேசத்திலுள்ள றயல்சீமா என்ற பிராந்தியத்தில் வசிக்கும் மக்களுக்குப் பல கோடி ரூபா செலவில் குடிநீர் விநியோகத் திட்டம் இயங்குகின்றது, சென்னையிலும் பாரிய குடிநீர்த்திட்டம் இயங்குகின்றது, கிராமங்களில் குழாய்க் கிணறுகள்
* **வறியவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தல்**
* **சுய தொழில் வாய்ப்புத் திட்டங்கள்**
* **கிராமிய சேவை**

சேவைகள் அனைத்தும் ஆன்மீக அடிப்படையில் அமைதியாகச் செய்ய வேண்டுமென்பதே பகவானின் அறிவுறுத்தல்.

"Love all. Serve all
Help ever . Hurt never"

**ஸ்ரீ சத்திய சாயி பாபா**

"ஜெய் சாயி ராம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனை நோக்கிய என் பயணம்

எனது முற் பிறவிகளில் செய்த நல்வினைகள் காரணமாக கலியுக அவதாரமாக அவதரித்திருக்கும் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவுடன் நேரடியாக பழகக்கூடிய பெரும்பேறு எனக்குக் கிடைத்தது. எனது வாழ்க்கையில் எனக்குக் கிடைத்த பெருங்கொடை எனக் கருதுகிறேன். பலவித குறைபாடுகள் என்னில் இருந்தும், என்னைத் தன்னுடைய அளப்பெருங் கருணையால் பாதுகாத்து, வழிகாட்டி, ஒரு சரியான பாதையில் செல்ல வழிகாட்டி விட்டார். இனி எத்தனை பிறவி வந்தாலும், அவருடைய கருணை என்மீது இருக்க வேண்டும் என்ற பிரார்த்தனையைத் தவிர வேறெதுவும் எனக்குத் தேவையில்லை. எனது வாழ்க்கைப் பயணத்தில், இறைவனை நோக்கிய பயண அனுபவங்களில் ஞாபகத்தில் உள்ள சிலவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்வதன் மூலம் , எனது சற்குருவில் நீங்களும் ஆழமான நம்பிக்கை கொள்ள முடியும் என்ற சாயிமார்க்க ஆசிரியர் குழுவின் கோரிக்கைக்கு இணங்க சம்மதித்தேன்.

## முதல் அனுபவம்

யாழ்ப்பாணத்தில் சாயியின் அறிமுகம் 1965 ஆம் ஆண்டில் ஏற்பட்டது. கூட்டுறவு உதவி ஆணையாளராக (A.C.C.D.) பதவி வகித்த திரு.K.S.பொன்னுத்துரையின் வீடு சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு முன்பாக இருந்தது. அங்கு நான் மாலை வேளைகளில் சென்று ஆத்மீகமாக உரையாடுவது வழக்கம். (அவர் பின்னர் யாழ். சமித்தித் தலைவராக இருந்தார்) ஒரு நாள் பாபாவைப் பற்றி பேச்சு வந்தது. திரு .பொன்னுத்துரை தாம் அறிந்த சில செய்திகளையும், அற்புதங்களையும் கூறினார். நானும் எனக்குத் தெரிந்த சில செய்திகளைக் கூறினேன். அபபோது பாபாவின் படம் ஒன்று கிடைக்கவில்லையே என்று இருவரும் பேசிக்கொண்டோம். சிறிது நேரத்தில், பழைய புத்தகங்கள் விற்பவர் ஒருவர் தெருவால் போய்க்கொண்டிருந்தார். அவரை நாங்கள் அழைத்து சில பழைய சஞ்சிகைகளை எடுத்துப் புரட்டிப் பார்த்தோம். எனது கைகளில் ஒரு பழைய "Illustrated Weekly of India" என்ற சஞ்சிகை அகப்பட்டது. அதைப் புரட்டியதும், பகவானின் ஒரு அழகான பெரிய படம் காணப்பட்டது. ஆச்சரியத்துடன் திரு.பொன்னுத் துரைக்கு காட்டினேன். அந்தப் பிரதியை உடனே வாங்கிக்கொண்டேன். அதுதான் யாழ்ப்பாணத் துக்குக் கிடைத்த முதற்படம் எனக் கருதுகிறேன். அதை இப்போதும் எனது வீட்டில் மாட்டி வைத்துள்ளேன். இது, எனது வாழ்க்கையில் நடந்த முதலாவது அற்புதம். படம் கிடைக்கவில்லையே! என்று கவலைப்பட்ட சில நிமிடங்களில், படம் கிடைக்கச் செய்தது, எனது நம்பிக்கையை ஆழமாக்கி விட்டது. தற்போது இலட்சக்கணக்கான படங்கள் கிடைக்கக் கூடியதாக உள்ளது. 1965 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஒரு படம் கிடைப்பது பெரும் பாக்கியமாகக் கருதப்பட்டது. "பிரேம மூர்த்தியே நம:"

## முதல் புட்ட பர்த்தி தரிசனம்

படம் கிடைத்ததும் அவரைத் தரிசிக்க வேண்டும் என்ற அடுத்த ஆசை ஏற்பட்டது. அடுத்த வருடமே, அதாவது 1966ல், மலேசியாவில் கல்வி அதிகாரியாகக் கடமையாற்றும் எனது மனைவியின் மாமனுடன் புட்டபர்த்தி செல்ல வாய்ப்பு ஏற்பட்டது. புட்டபர்த்தி சென்றதும் அங்கு மலசலகூட வசதியில்லை என்று அறிந்ததும், உடனடியாக பெனு குண்டா என்ற ரயில் நிலையத்திற்குத் திரும்பிப் போக வற்புறுத்தினார். அங்கு, அரசாங்க விடுதி ஒன்றில் தங்கி விட்டு, அடுத்த நாள் புட்டபர்த்திக்குச் சென்றோம். அன்று விஜயதசமி. பகவான் கும்பத்து நீரை எல்லோருக்கும் தெளித்து வந்தார். நாங்கள் மண்டபத்துள் நுழைந்ததுமே எனது முகத்தில் நேரடியாகவே தர்ப்பையினால் தெளித்தார். எதிர்பாராததினால் அதிர்ச்சியடைந்துவிட்டேன். முகம் முழுவதும் நனைந்துவிட்டது. இது பகவானின் முதலாவது நேரடி ஆசீர்வாதம். இதுதான் 38 வருடங்களுக்கு மேலான தொடர்பின் அத்திவாரம்.

அடுத் வருடம் 1967இல் எனது குடும்பத்தினருடன் புட்டபர்த்தி சென்றோம். முதலில் அறை ஏதாவது கிடைக்குமா என்று பொறுப்பாக இருந்த கஸ்தூரி அவர்களிடம் விசாரித்தேன் "மரங்களின் நிழல்கள் கூட பதிவு செய்யப்பட்டு விட்டது" என்று பதில் கூறினார். பாய்கள் வாங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்தில் இருந்தோம். எப்படி நாட்களைக் கழிக்கப் போகின்றோம் என்ற ஏக்கம். ஏனெனில் இயற்கைத் தேவைக்காக வெளியே சென்று பழக்கமில்லை. சிறிது நேரத்தில் ஒரு தொண்டர் வந்து "நீங்கள் இலங்கையில் இருந்து வருகிறீர்களா?" என்று கேட்டார். உங்களுக்கு ஒரு அறை ஒதுக்கப் பட்டுள்ளது என்று கூறி, அறைக்குக் கூட்டிச் சென்றார். உள்ளே சென்று பார்த்தபோது அது மலசலகூடமும் குளியல் அறையும் சேர்ந்த ஒரு அறை. அந்த நாட்களில், புட்டபர்த்தியில் இருந்த வசதி நிறைந்த சில அறைகளுள் அதுவும் ஒன்று. கடந்த வருடம் நாங்கள் வந்த போது, பெனுக்குண்டா ரயில் நிலையத்திற்கு திரும்பிச் சென்று அரசாங்க விடுதியில் தங்கியதை பகவான் அறிந்து, இங்கேயே சகல வசதிகளுடைய ஒரு அறையை எமக்குத் தந்தார். தாயிற் சிறந்த தயவான தத்துவன்.

எங்கள் அனைவரையும் இன்ரவியூ அறைக்கு அழைத்தார். சுமார்45 நிமிடங்கள் எமக்கு ஒரு ஆன்மீகச் சொற்பொழிவு நடாத்தினார். "**நான் யார்?" என்று கேளுங்கள்.** இந்தக் கேள்விக்கு சரியான விடை கண்டீர்களானால், இது உங்களின் அனேக சந்தேகங்களைப் போக்கும். இதுதான் ஆன்மீகத்தின் அடிப்படை. நான் என்பது ஒன்றுதான். அறியாமையால் பலவாகக் காண்கின்றோம். நான்கு பக்கமும் கண்ணாடி பொருத்தப்பட்ட ஒரு அறைக்குள் ஒரு நாய் சென்றால் அது பல விம்பங்களைக் கண்டு குரைத்து, கண்ணாடியையும் உடைத்துவிடும். கண்ணாடி உடைந்தால் அது இன்னும் பல விம்பங்களை உண்டாக்கி விடும். ஆனால் ஒரு மனிதன் நுழைந்தால் , தன்னுடைய தோற்றத்தையே பலவாகக் காண்பான்" என்று பல உதாரணங்களுடன் விளக்கினார். நான் எனது மகனைக் காண்பித்தேன் "ஆப்பரேசன் செய்யும் போது ஒரு நரம்பு வெட்டப்பட்டு விட்டது." என்று கூறினார். "நாங்கள் செய்த பாபம் தானே சுவாமி?" என்றேன்" இல்லை, இல்லை, அனுக்கிரகம் உண்டு" என்று கூறி ஆறுதலளிக்க விபூதியும், மருந்தும் சிருஷ்டித்து தந்தார்.

அந்த இன்ரவியூவில் எனக்கு ஒரு பயம் இருந்துகொண்டே இருந்தது. நான் திறம் "V.S.S.K. சுருட்டு" பிடிப்பது வழக்கம். அத்துடன் "நேவிகட்" சிகரெட்டும் புகைப்பேன். எனது பயணப் பொதியினுள் இவை இரண்டும் தாராளமாகக் கட்டுக்கட்டாக இருந்தது. எங்கே சுவாமி இவற்றையெல்லாம் வெளிச்சம் போட்டுச் சொல்லி விட்டு மானத்தை வாங்கிவிடுவாரோ, என்ற பயம். அப்படி எதுவும் அங்கு நடக்கவில்லை. இந்தப் பயணம் எல்லாம் முடிந்து சந்தோஷமாக வீடு வந்து சேர்ந்தோம். அன்று மத்தியானம், சாப்பிட்டு விட்டு ஏதாவது வாசிக்கலாமா என்று நினைத்து எனது புத்தக அலுமாரியிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்தேன். ஏதோ ஒரு பக்கத்தைத் திறந்தேன். அதிர்ந்துவிட்டேன். முதலில் கண்ணிற் பட்ட வசனம் இதுதான் "எனக்கு புகைப் பிடிப்பவர்கள் அருகில் வருவது பிடிக்காது" என்று காணப்பட்டது. என்னை இன்ரவியூ அறையிலேயே வைத்து இதனைச் சொல்லியிருக்கலாம் . அப்படிச் செய்தால் எனது மனம் துன்பப்படும் என்று அறிந்து, பயணம் எல்லாம் மகிழ்ச்சியாக முடிந்து வீடு வந்த முதல் நாளிலேயே, சொல்ல வேண்டியதை நோகாமல் சொல்லி உணர வைத்த அன்பை வாழ்நாளில் மறக்க முடியுமா? **அன்றே புகைத்தலை விட்டேன். அத்துடன் சேர்ந்து மாமிசத்தையும், குடியையும் விட்டேன்.** இது இறைவனை நோக்கிய எனது பயணத்தில் ஒரு பெரிய உந்து சக்தியாக விளங்கியது. **"கருணாகராய நம:"**

## சுவாமி எங்கள் வீட்டிற்கு வந்தார்

ஒரு முறை சுவாமியின் இன்ரவியூ அறையில், நானும் எனது மனைவியும் சுவாமியுடன் பேசினோம். எனது மனைவி திடீரென "சுவாமி நீங்கள் எங்கள் வீட்டிற்கு வரவேண்டும் !." என்று கேட்டார். எனக்கோ மனைவியின் மீது கோபம் பீறிக்கொண்டு வந்தது. எதுவும் செய்ய முடியவில்லை. ஆனால் சுவாமி புன்சிரிப்புடன் " வருவேன் ! வருவேன்!" என்று கூறினார். வெளியே வந்ததும் எனது மனைவியைக் கடுமையாகப் பேசினேன். " யாழ்ப்பாணம் எங்கே? புட்டபர்த்தி எங்கே? சுவாமியைக் கேட்கக் கூடிய கேள்வியா இது? ஒரு பொது அறிவாவது வேண்டாமா?" என்று பொரிந்து தள்ளினேன். இந்தியப் பயணம் முடிந்து ஒரு மாதம் இருக்கும், நானும் வவுனியாவுக்கு வேலைக்குப் போய்விட்டேன். எனது மனைவியிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. "நேற்று இரவு, சுவாமி வெள்ளை உடுப்புடன் வீட்டிற்கு வந்து, தம்பியையும் கூட்டிக் கொண்டு வைமன் வீதியால் நல்லூருக்குக் கூட்டிச் சென்றார், என்றும், இதே காட்சியை கராச்சில் படுத்திருந்த வேலைக்காரனும் கண்டதாகவும் எழுதியிருந்தார். விடிந்ததும் வேலைக்காரன் ஓடிவந்து " அம்மா, உந்தப் படத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறவர், இராத்திரி வீட்டுக்கு வந்து தம்பியையும் கூட்டிக் கொண்டு வைமன் றோட்டால் போனவர்.'' என்று கூறியதாகவும் எழுதியிருந்தார். இருவருக்கும் ஒரே காட்சியைக் காட்டியதன் மூலம், என்னை நம்ப வைக்க ஒரு சாட்சிவேணும் என்பதற்காக வேலைக் காரனுக்கும் அதே காட்சியைக் காட்டிவிட்டார். சாட்சி இல்லாவிடில் நான் நம்பியிருக்க மாட்டேன். அவவின் மனப் பிராந்தி என்று ஒதுக்கிவிட்டிருப்பேன்.

இது போலத்தான் சாட்சியை வைத்து நடத்திய இன்னொரு சம்பவம். 80 ஆம் ஆண்டிற்குமுன், யாழ்ப்பாணம் சமித்தியின் முன், யாழ்ப்பாணம் சமித்தியின் நகர சங்கீர்த்தனம் பெரிய வட்டமாகச் சுற்றிவருவோம். சமித்தியிலிருந்து புறப்பட்டு பலாலி வீதி வழியாக அரசடி வீதிக்குச் சென்று K.K.S. றோட் வழியாக நாச்சிமார் கோவில் சந்திக்கு வந்து அங்கிருந்து சமித்திக்குச் செல்வோம். அனேகமாக, நாச்சிமார் கோவிலடிக்கு வந்தும் காலைப் பூசை நடைபெறும். ஒருநாள் குருக்கள் ஆதிமூலத்தில் தீபாராதனை செய்த போது, நான் ஆதிமூலத்தில் பகவானின் முழுத் தோற்றத்தையும், அபயக் கரத்துடன் கண்டேன். அது எனது மனப் பிரமையை என்று எண்ணி, யாரிடமும் கூறவில்லை. சிறிது தூரம் வந்ததும் நண்பன் விஜயரத்தினம் எனது அருகில் வந்து ''ஒரு காட்சியை கண்டீர்களா?'' என்று கேட்டார். ''என்ன காட்சி?'' என்று கேட்டேன். ''சுவாமி ஆதிமூலத்தில் தரிசனம் தந்தார்.'' என்று கூறினார். எனது மனப் பிராந்தியோ என்று நான் சந்தேகப்பட்ட வேளை, ஒரு சாட்சியையும் வைத்து அது உண்மைதான் என்று என்னை நம்ப வைத்துவிட்டார். ''சுலபப் பிரஸ்ன்னாய நம:''

### பிரசாத மகிமை

அடுத்தாக பிரசாத மகிமையை எனக்கு உணர வைத்த சம்பவம் ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. 1985 ஆம் ஆண்டு அகண்ட பஜனை 2.11.85, 3.11.85 ஆகிய இரு தினங்களும் புட்ட பர்த்தித்தியில் இருக்கக் கூடிய ஒரு வாய்ப்பு. 2ஆம் திகதி இரவு முழுவதும் பஜனையில் இருந்தோம். ஞாயிறு காலை 6.30 மணிக்கு பஜனை நடந்துகொண்டிருந்த போதே சுவாமி எல்லோருக்கும் பிரசாதமாக காலை உணவை, தானே மேற்பார்வை செய்து வழங்கினார். ஒவ்வொருவருக்கும் இரண்டு இலைகள் (கல்லைகள்) கொடுக்கப்பட்டன. ஒன்றில் சக்கரைச் சாதம், மற்றதில் புளிச்சாதம். எனக்குப் பக்கத்தில் பேராசிரியர் கஸ்தூரி இருந்தார். நான் சாதாரணமாக, மிளகாய் போன்றவற்றை எடுத்துவிட்டு சாப்பிட்டு முடித்து இலையைக் கூடையில் போட்டுவிட்டேன். எனக்கு அருகில் இருந்த கஸ்தூரி அவர்கள் இலையில் ஒரு மணியும் விடாமல் எடுத்துச் சாப்பிட்டார். இலையையும் நாக்கினால் துப்பரவாக்கி விட்டுத்தான் கூடையில் போட்டார். நான் அவரை ஆச்சரியமாகப் பார்த்தேன். ''சுவாமியின் கைகளால் தந்த பிரசாதம். ஒரு மணியையும் வீணாக்கக்கூடாது'' என்ற நம்பிக்கை அவருக்கு. பிரசாதத்திற்கு அவர் கொடுத்த மரியாதை எனக்கு ஒரு பாடமாக அமைந்தது. எமது நாராயண சேவைகளில் நாம் எவ்வளவு உணவை வீணாக்குகின்றோம். சிந்திக்க வேண்டியது.

இன்னொரு சம்பவம். நான் 2000 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்துடன் ஓய்வுபெறும் கடிதத்தை சுவாமியிடம் கொடுத்தேன். சுவாமி அதைப் பெற்றுக்கொண்டு விபூதி சிருஷ்டித்தார். கைநிறைய வந்தது. அதைக் கொடுத்தால் நான் கொட்டிவிடுவேன் என்று கருதி, அருகில் நின்ற தொண்டரிடம் ஒரு கடதாசி வாங்கி அதில் விபூதியை போட்டுத் தானே மடித்து, எனது சேட் பொக்கட்டுள் வைத்துவிட்டார். அப்படி இருந்தும், நிலத்தில் சில துளிகள் விபூதி பாபாவின் கைகளில் இருந்து நிலத்தில் கொட்டிவிட்டது. எனக்கு அருகில் இருந்தவர் ஒரு டாக்டர். உலகப் புகழ் பெற்ற இருதய சத்திர சிகிச்சை நிபுணர். அமெரிக்காவில் சான்பிரான்சிஸ்கோ நகரில் தொழில்பார்ப்பவர். சுவாமியின் வைத்தியசாலைக்கு வந்து தொண்டு புரிபவர். அவர், கொட்டிய வீபூதித் துளிகளைக் கைவிரல்களால் ஒற்றி, ஒற்றி, தனது நாக்கில் வைத்தார் பலபேர் போகும் பாதையில் கொட்டிய வீபூதியை ஒற்றி எடுத்து நாக்கில் ஒற்றினார். உலகப் புகழ்பெற்ற டாக்கடர் பாபாவின் வீபூதியை ஒரு கிருமியும் தாக்க முடியாது என்பதை உறுதியாக நம்பினார். ''பரமம் பவித்ரம் பாபா விபூதிம்'' என்பதன் பொருளை உணர்ந்தேன். ''மஹி மாத்மனே நம:''

### பொலிஸ் நிதியில் இருந்து பணம்

சுவாமியின் 60 ஆவது அவதார தினவிழா "Hill View Stadium" த்தில்நடைபெற்றது. நானும் கலந்து கொண்டேன். விழா முடிந்ததும் அவசரப்பட்டு ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறான முடிவு எடுத்துவிட்டேன் அதாவது விரைவாக வெளியே போக முற்பட்டு சன நெரிசலில் அகப்பட்டுக்கொண்டேன். கைகளை அசைக்க முடியவில்லை. கூட்டத்துடன் தள்ளுப்பட்டுப் போய்கொண்டிருந்தேன். அப்போது எனது காற்சட்டைப் பொக்கற்றுனுள் கைவிட்டு எனது பேர்சை யாரோ எடுப்பதை உணர்ந்தேன். ஆனால் கழுத்தைத் திருப்பிப் பார்க்கமுடியவில்லை. உதவிக்கு யாரையும் கூப்பிட முடியாத நிலை. எதுவுமே செய்ய முடியவில்லை. சன நெரிசலால் வெளியே வந்து பொக்கற்றைப் பார்த்தேன். எனது பேர்சில் ரூபா1000/= களவு போய்விட்டது. அந்த நேரத்தில் அது பெரிய தொகை. செலவுக்குப் பணம் தட்டுப்பாடு. பொலிஸ் நிலையத்திற்குச் சென்று புகார் செய்தேன். அபபோது எனது தொழிலைக் கேட்டனர். நான் கூறியது அவர்களுக்கு விளங்கவில்லை. உங்கள் ஊரில் கலெட்டர் உத்தியோகத்திற்குச் சமமான உத்தியோகம் என்று கூறினேன். எனது விலாசத்தைப் பெற்றுக் கொண்டு, தகவல் தருவதாகக் கூறினர். அப்போது அங்கிருந்த ஒரு அமெரிக்கப் பெண்மணியைக் காட்டி, அவர் 25,000/= டொலர் தொலைத்து விட்டதாகக் கூறினர். மேலும். பொலிஸ் இன்ஸ்பெக்டர் "இங்கு தொண்டர்கள் கடமையாற்ற வருவது போல, சுவாமியின் Birthday க்கு சுமார் 2000 பிக் பொக்கற் களும் சேவைக்கு வருகிறார்கள்" என்று கூறினார். இரண்டொரு நாளின் பின் எனக்கு பொலிஸ்ரேசன் வரும்படி தகவல் வந்தது, சென்ற போது, பொலிஸ் இன்ஸ்பெக்டர் கூறினார், "சேர் எங்கள் பொலிஸ் நிதியில் இருந்து உங்களுக்கு 500/= ரூபா தருவதாகத் தீர்மானித்துள்ளோம்" என்று கூறி உரிய படிவங்களில் கையொப்பம் பெற்று, 500/= தந்தார்கள். தொலைந்த பணத்தைப் பொலிஸ் நிதியில் இருந்து கொடுப்பதை நான் எங்கும் கேள்விப்பட்டதில்லை. சுவாமி சங்கற்பித்தால் நடக்க முடியாதது எதுவுமில்லை. "அன்ன வஸ்திர தாய நம:"

## எல்லாம் அறிந்தவர்

பல வருடங்களுக்கு முன்பு யாழ்ப்பாணம் சமித்தியின் தலைவராக இருந்தபோது, சமித்தி சம்பந்தப்பட்ட விடயமாக சுவாமியின் இன்ரவியூ அறைக்குள் அழைக்கப்பட்டோம். அங்குநான் ஒரு கடிதம் அவரிடம் கொடுத்தேன். அவர் அதை வாங்கி வாசித்தார். கடிதத்தின் மேற்பகுதியில் சமித்தியின் உத்தியோகத்தர்களின் பெயர் அச்சிடப்பட்டு இருந்தது. சடுதியாக, உப தலைவரின் பெயரைத் தன் விரலால் சுட்டிக் காட்டி, "இவன் தானா vice president?" என்று கேட்டார். எனக்கு மூச்சு நின்றுவிட்டது. அது Dr. இராசரத்தினத்தின் பெயர். அவர் காலமாகி ஒரு வருடத்திற்கு மேல். அதனை நீக்காமல் அல்லது வெட்டாமல் அப்படியே கொடுத்ததை நினைத்து என்னையே நொந்து கொண்டேன். அதை சுவாமிக்கு மிகவும் மன்னிப்புடன் சொன்னேன். சிரித்துக் கொண்டு வேறு விடயத்திற்கு வந்தார். பேச்சின் நடுவில் "எல்லாம் பகவானுக்குத் தெரியும்" என்றும் கூறினார். சுவாமி ஒவ்வொரு விடயத்தையும் எவ்வளவு கூர்மையாக அவதானிக்கிறார் என்றும், ஒவ்வொரு விடயமும் மிகச் சரியாக இருக்க வேண்டும என்பதில் எவ்வளவு கவனமாக இருக்கிறார் என்பதையும் படிக்க வேண்டிய பாடத்தைப் படித்து விட்டேன். பகவானே! "சர்வக் ஞாய நம:"

## எனது காவலன்

1975ஆம் ஆண்டுக்குமுன் பிரசாந்தி நிலையத்தில் தங்குவதற்கு அவ்வளவு வசதிகள் இல்லை. நானும் மனைவியும் வெளியில் ஒரு அறையில் தங்கினோம். காலை 6 மணிக்கு, ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட கடைக்கு கோப்பி குடிக்கப் போவோம். இந்தக் கடை பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக இருந்தது. எங்களைக் கண்டவுடன் மனேச்சர் "ஸ்பெசல் காப்பி இரண்டு" என்று உதவியாளருக்கு குரல் கொடுப்பார். நானும் மனைவியும் ஒரு குறிப்பிட்ட மேசையில்தான் ஒவ்வொரு நாளும் இருப்போம். காப்பி உண்மையில் ஸ்பெசல் காப்பிதான்.

ஒரு நாள் வழக்கம் போல சென்று மேசையில் அமர்ந்துவிட்டோம். காப்பியும் தயாராக ஆயத்தம். சொற்ப நேரத்தில் வந்துவிடும். ஆனால் நான் சடுதியாக, எந்த ஒரு காரணமும் இன்றி மனைவிக்குச் சொன்னேன், "இன்று பக்கத்துக் கோப்பிக் கடையை ஒருக்கால் பார்ப்போம்." என்று மனைவியும் சம்மதித்து இருவரும் கிளம்பி உடனே பக்கத்துக் கடைக்கு மாறினோம். அங்கு ஒரு மேசையில் அமர்ந்ததுதான் தாமதம் ஒரு பெரிய சத்தத்துடன் நாங்கள் விட்டுவந்த கோப்பிக்கடை இடிந்துவிழுந்தது. கொங்கிறீட் பிளாட் அப்படியே கீழே விழுந்துவிட்டது. அந்தக் கடை மனேச்சர் ஓடிவந்து "என்னண்டு சார், நீங்கள் விலகி இங்கே வந்தீர்கள் நொடிப்பொழுதில் தப்பிவிட்டீர்கள். இருந்திருந்தால் சப்பட்டைதான்" என்று கூறினார். எந்த ஒரு காரணமும் இன்றி கடையை மாறச் செய்தது பகவான்தான். என்னுடைய ஒவ்வொரு அசைவையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்காணிக்கின்றார். என்பதை உணர்ந்து கொண்டேன். "கர்மத்துவம்ஸினே நம:"

## ஆபத்பாந்தவன்

கேரதீவு– சங்குப்பிட்டிப் பாதை வழியாக வவுனியாவுக்குச் சென்று அங்கிருந்து கொழும்மை அடைந்து, புட்டபர்த்திக்குச் சென்ற காலம். கேரதீவு ஜெற்றியில் இருந்து சிறு தோணிகளில் ஏறி, சங்குப்பிட்டி தாம்போதி (Cause way) ஆரம்பமாகும் ஜெற்றியில் இறங்கி, 3 அல்லது 4 கிலோ மீற்றர் தூரம் நடந்து சென்று, பின்னர் பஸ் வண்டி ஏறவேண்டும். சில சந்தர்ப்பங்களில் வெற்றுலொறி அல்லது ரக்டர் ஏதாவது கிடைத்தால், அதில் ஏறிப் போகலாம். அன்று, நல்ல இருட்டு கடைசி வள்ளம், எனது நண்பன் தம்பிநாதனும் நானும்தான் மிச்சம். தாம்போதியைக் கடக்க வாகனம் எதுவும் இல்லை. இரவு 9 மணிக்கு மேல் இருவரும் வயோதிபர்கள், எங்கள் பயணப் பொதிகளை தூக்கிக்கொண்டு நடக்க ஆரம்பித்தோம். கையில் இருந்த டோச் லைட்டையும் தொடர்ச்சியாக அடிக்க முடியாது. காவலில் இருக்கும் கடற்படையின் துவக்குச் சூட்டிற்கு இலக்காக வேண்டிவரும். 200 அல்லது 300 யார் வரை நடந்திருப்போம். தொடர்ந்து நடக்க முடியவில்லை. மூட்டைகளை நடுறோட்டில் இறக்கி வைத்தோம். " "Swami what do we do now?" "சுவாமி, இப்போ நாங்கள் என்ன செய்ய?" என்று ஆங்கிலத்தில் சிறிது உரமாகவே கத்தினேன். சுற்றிவர எவரும் இல்லை என்ற நிலைப்பில்.

அதிசயம் ! ஒரு சொற்ப நேரத்தில் சங்குப்பிட்டிக் கரையில் இருந்து ஒருவர், சாரமும், சேட்டும் அணிந்தவர். சைக்கிளில் அவ்விடம் வந்து, "Yes, what is the problem?" என்ன பிரச்சினை?" என்று ஆங்கிலத்தில் கேட்டார். நாங்கள் எங்கள் இக்கட்டான நிலையை விளங்கப்படுத்தினோம். "பயம் வேண்டாம். நான் உதவி செய்கின்றேன்" என்று கூறி எங்கள் இருவரது பொதிகளையும் சைக்கிளில் வைத்துக் கட்டினார். "என்னுடன் நடந்து வாருங்கள்" என்று சொல்லி திருப்பவும் சங்குப்பிட்டிப்பக்கம் தனது சைக்கிளைத் திருப்பி எங்களை அழைத்துச் சென்றார். போகும்போது, தனக்கு ஒரு காசும் தரப்படாது என்றும் சொல்லி வைத்தார். கரையை அடைந்ததும், அங்கிருந்த ஒரு தேனீர்க்கடையில் Plain Tea வாங்கிக் கொடுத்தேன். நாங்களும் குடித்தோம். பின் உதவியவரை தேடினோம். எங்கள் பொதிகள் எல்லாம் நிலத்தில் இருந்தது. உதவியவரைக் காணவில்லை. யாருமற்ற கடற்கரையில், நடு இரவில் கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வந்து உதவி செய்தது, சுவாமியைத் தவிர வேறுயாராக இருக்க முடியும்? "ஆபத் பாந்தவாய நம:",

## வைர மோதிரம் தந்தார்

ஒரு முறை உலக மகாநாட்டிற்குச் சென்றிருந்த மத்திய இணைப்பாளர்கள் எல்லோரையும், உலக கவுன்சில் தலைவர் இந்துலால்ஷா அவர்களையும் இன்ரவியூ அறைக்கு சுவாமி அழைத்தார். நான் கடைசி வரியில் இருந்தேன். சுவாமி என்னை நோக்கி "இங்கே வா" என்று கூப்பிட்டு தனது கதிரைக்குப் பக்கத்தில் இருத்தினார். "நீ நல்ல வேலை செய்கிறாய்" என்று சொல்லி கையை அசைத்தார். ஒரு வைர மோதிரம் சிரிஷ்டித்து எனது கைவிரலில் அணிந்துவிட்டார். எனக்கு நேர் எதிரில் இந்துலால் ஷாவின் மனைவியும், அவரின் மகளும் இருந்தனர். அவர்களை நோக்கி ஒரு பொற்கொல்லர் கூட இப்படி அளவான ஒன்றைச் செய்திருக்க முடியாது" என்று கூறிக்கொண்டு எனக்குப் பாத நமஸ்காரமும் தந்து நெற்றியில் வீபூதியும் பூசிவிட்டார். இந்த மோதிரம் ஒரு கவசம் ஆக இருந்துவருகிறது. இமைப்பொழுதும் எனது சற்குருவை மறவாமல் இருக்க இந்த மோதிரம் எனக்கு உதவுகிறது "அபயப் பிரதாய நம:"

புட்டபர்த்திக்கு யாத்திரை செய்யும் பல பக்தர்களுக்கு எத்தனையோ வழிகளில் சுவாமி உதவி செய்கிறார். விபத்துகளில் இருந்து காப்பாற்றுகிறார், கைதவறிவிட்ட பாஸ்போட்களைத் திருப்பிக் கொடுத்திருக்கிறார். பணமும் கொடுத்திருக்கிறார். கணக்கில் சொல்ல முடியாத உதவிகள் செய்திருக்கிறார். இவையெல்லாம் இறைவனை நோக்கிய எங்கள் பயணத்தில் ஒவ்வொரு மைல் கற்கள். நம்பிக்கை, விசுவாசம், பக்தி என்பவற்றை அதிகரிக்கும் ஒரு கொடை. ஒவ்வொரு பக்தருக்கும் ஒவ்வொரு அனுபவம் இருக்கும். இறைவனை நோக்கிய பயணத்தில் ஏற்பட்ட அனுபவங்களைப் பகிர்ந்து செல்வதன் மூலம் உற்சாகத்துடன் எமது வாழ்க்கையின் இலட்சியத்தை அடைந்துவிடலாம்.

"ஜெய் சாயி ராம்"

**செ.சிவஞானம்**
**மத்திய ஆலோசகர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் ஸ்ரீ சாயி ராம்"

# சுவாமியைத் தரிசித்த இராக்கியத் [Iraq] தம்பதிகள்

இவ்வருடம் மே மாதத்தில் பாக்டாட் நகரத்தின் முன்னாள் பொலிஸ் மா அதிபராகிய யசின் டாவூட் சுலைமன் (Gen.Yassin Dawood Suleimen) அவர்களும், அவரின் பாரியாரும் பிரிருந்தாவனத்தில் வந்திருந்த போது சந்தித்து அறிந்ததை இங்கு தருகின்றேன்.

பொலிஸ் மா அதிபர் 1977 ஆம் ஆண்டு, அந்நாட்டுத் தலைவர் சடாம் ஹுசெயின் மனச் சாட்சிக்கு எதிரான செயலைச் செய்யும்படி வற்புறுத்தியதன் நிமித்தம் தனது பதவியிலிருந்து விலகினார். பின்பு துருக்கி, பல்கேரியா நாடுகளில் வாணிபம் செய்து செல்வந்தரானார். அமெரிக்கப் படை ஈராக்கைக் கைப்பற்றிய பின்பு, தனது நாட்டிற்குச் சென்றார். அங்கே நடக்கும் வன்முறைச் சம்பவங்களைக் கண்டு மனம் வருந்தினார். அமெரிக்கர்கள் இவரைத் திரும்பவும் பொலிஸ் பதவியை ஏற்குமாறு கேட்டார்கள். இதற்கு அவர், மறுப்புத் தெரிவித்தார். நாட்டின் நிலைமை திருந்த வேண்டுமென்று அல்லாவை அல்லும் பகலும் பிரார்த்தித்தார். பிரார்த்தனை தீவிரம் அடைந்த வேளைகளில், உள்மனது யாரோ ஒரு தெய்வீகமானவரைப் போய்ச் சந்திக்கச் சொல்லி உறுத்திக் கொள்ளத் தொடங்கியது. உள்மனதே இந்தியாவுக்குப் போகும்படியும் உறுத்தியது. போகவும் தீர்மானித்தார்.

தனது மனைவி அமீரா அலிக்குத் தனது தீர்மானத்தைச் சொன்னார். மனைவி, யாரைப் பார்க்க வென்றும், இந்தியாவில் எந்த இடத்திலென்றும் தெரியாமல் எவ்வாறு பயணம் செய்வது என்று கேட்டார். கணவனின்தீர்மானத்திற்கு ஒருவாறு ஒத்துக்கொண்டு பயணத்தை ஆரம்பித்தனர். ஈராக்கிலிருந்து விமான மூலம் பயணம் செய்ய முடியாத நிலைமை இருந்ததால், தரை மார்க்கமே ஈரான், பாகிஸ்தான் நாடுகளினூடாக இந்தியாவை வந்தடைந்தனர். அம்றிஸ்ரார் நகரிலிருந்து டில்லிக்கு வந்தார்கள். டில்லி புகையிரத நிலையத்தில் பிரயாணச் சீட்டு விற்கும் யன்னலடியில், ஏதாவது ஒரு புனித ஸ்தலத்திற்கு பயணச் சீட்டுத் தருமாறு கேட்டார். அங்கிருந்த ஒருவர் தர்மவரம் என்று சொல்ல, சீட்டு விநியோகித்தவர் நேரே புட்டபர்த்திக்குப் போகலாமென்று, பயணச் சீட்டுக்களைக் கொடுத்தார். புட்டபர்த்தி புகையிரத நிலையத்தில் இறங்கியதும், பகவானின் படத்தைக் கண்டதும், இவர்தான் நான் தேடும் புனித மனிதனென்று சொல்லி ஆனந்தமடைந்தார். பின்பு பிரசாந்தி நிலையத்திற்குப் போனார். புட்டபர்த்தியை அடைய 24 நாட்கள் எடுத்தன. அவரின் ஆர்வமோ எள்ளளவும் குன்றவில்லை. சுவாமி பங்களூரில் இருந்ததை அறிந்து, ஒரு ஜேர்மன் பக்தர் இருவரையும் அடுத்த நாள் "வைற் வீல்ட்" (Whitefield)க்கு கூட்டிச் சென்றார். அங்கே ஆச்சிரமத்தில் தங்கினார்கள். அவர்கள் பகவானைக் கண்ட ஆனந்தத்தில் மிதந்தார்கள். அவர் தனது நாட்டைக் காக்க வேண்டுமென்று "பாபா சுவாமியிடம்" பிரார்த்திப்பதாகச் சொன்னார்.

என்ன அதிசயம் !! எவ்வாறு பகவான் தனது பக்தர்களை ஈர்க்கின்றார். இவர்களே ஈராக்கிலிருந்து (Iraq) வந்த முதற் பக்தர்களாக இருக்க வேண்டும்.

"ஜெய் சாயி ராம்"

**செவ்வி கண்டவர்; Dr.G.வெங்கட்ராமன்**
**தகவல் : சாயி வானொலி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தியசாயி சேவா நிறுவனச் செய்திகள்

வடபிராந்தியம்:
23.10.2004 :

சத்திய சாயி வித்தியாலயத்தின் முதலாவது பரிசளிப்பு விழா மானிப்பாயில் நடந்தது. இதில் Dr.சந்திமா டீ சில்வா அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். கொழும்பிலிருந்து மத்திய இணைப்பாளர் திரு.M.வன்னியசேகரம் பிரதி இணைப்பாளர் திரு.R.நாராயணசுவாமி,, திருமதி சா. மகேந்திரன், திரு.ஜகத் குணசேகர கலந்துகொண்டார்கள்.

**அன்றைய தினம் காலை:**

பருத்தித்துறையில் திருத்தி அமைக்கப்பட்ட சாயி மந்திரின் மண்டபத்தை திறந்து வைத்தார்கள்.


**அன்றைய தினம் பிற்பகல்;**

மத்திய இணைப்பாளரும், பிரதி இணைப்பாளரும் வடபிராந்திய நிர்வாகிகளுடன் அவதாரின் 80ஆவது வருடத்தை முன்னிட்டு 2005 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்போகும் சேவைத் திட்டங்களை விளங்கப்படுத்திக் கூறினார்கள். அவையாவன:

* 80 சக்கர வண்டிகளைச் சீனாவில் இருந்து இறக்குமதி செய்து 80 ஊனமுற்றோருக்குக் கையளிப்பது. இதில் 15 ஐ யாழ் பிரதேசத்திற்கு ஒதுக்கியுள்ளார்கள்.
* 80 குடிநீர் வளங்களை அளித்தல்: குழாய்க்கிணறு, சாதாரண கிணறு அல்லது பாழடைந்துபோன கிணறுகளைத் திருத்திக்கொடுத்தல் இதில் அடங்கும்.
* 80 செயற்கைக் கால்/கை பொருத்த உதவுவது.
* 80 பசுமாடுகளை இறைச்சிக்காகக் கொல்லும் இடத்திலிருந்து விடுவிப்பது.
* 80 கண்நோயாளிகளுக்குச் சத்திரசிகிச்சையை ஏற்பாடு செய்து உதவுதல்.
  மேற்கூறிய சேவைகளைப் பூர்த்தி செய்தபின்பு, வசதி இருந்தால் வறுமைக் கோட்டில் கீழ் வாழ்பவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தல்.
* மத்திய அலுவலகத்தின் அறிவுரையின்படி:
* 80 வறிய குடும்பங்களைத் தத்துவம் எடுத்தல்
* விழிப்புணர்வு நிகழ்வுகள்: 9 இலவச வைத்திய சேவைகள் "ஒருமை, தூய்மை, தெய்வீகம்" என்ற மூலக்கருவில் பொதுக் கூட்டங்களை நடத்துதல்.
* 80 பேருக்கு தொழில் சார்புப் பயிற்சி
* கண்காட்சி : அன்புச் சகோதரி பெனி ஜயவர்த்தன சைதன்ய யோதியில், சைவ உணவின் மகிமை மதுபானக்கேடு என்ற தலைப்பில் கண்காட்சி நடத்த உத்தேசித்துள்ளார்.
* நூல் வெளியீடு : பேராசிரியர் சுனாந்தா டெகொம்பட "Sathya Sai Path to Glory" என்ற நூலை வெளியிடுவார்.
* சிறப்பு மலர் வெளியீடு
* சர்வதேச ரீதியில் 80 கண் விழிகளை பிரசாந்தி நிலையத்தில் நடக்கும் கண் சத்திரசிகிச்சைக்காகத் தானம் செய்ய உத்தேசம் உண்டு.
* இச்சேவைத் திட்டங்களை அமுல்படுத்த தேசிய ரீதியிலும் பிராந்திய ரீதியிலும் சேவைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கற்றன் தேசிய வங்கியில் ஒரு கணக்கும் திறக்கப்பட்டுள்ளது. அடுத்த வருடம் நிலையங்கள் இணைந்து சேவைத் திட்ங்களைச் செயற்படுத்த வேண்டுமென்று கேட்கப்பட்டுள்ளார்கள்.
* 24.10.2004. கைதடியில் வலுக்குறைந்த இருபெண்களுள்ள குடும்பத்தினருக்குக் கட்டிய வீடு பிரார்த்தனையுடன் மத்திய இணைப்பாளரினால் கையளிக்கப்பட்டது.
* 25.10.2004 – 31.10.2004: யாழ் நகரில் அன்பு வாரம் அனுஷ்டிக்கப்பட்டது. இதையிட்டு பாடசாலை மாணவர்களிடையே போட்டி நடாத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன்

பந்தம் ← மனம் → மோட்சம்

| | | | |
|---|---|---|---|
| | உடல் | மனம் | ஆத்மா |
| | மிருகம் | மனிதன் | தேவன் |
| நிலை ............ | சாதாரண விழிப்பு | கனவு | ஆழ்ந்தஉறக்கம் |
| சரீரம் ............ | ஸ்தூல (gross) | சூட்சும (Subtle) | காரண (Causal) |
| பெயர் ............ | விஸ்வடு | தைஜன் | பிரக்ஞன் |
| தன்மை ............ | வியவஹாரிக வெளிச்செயல் | பிரதிபாஷிகம் | பரமார்த்திகம் புலன்,மனம், புத்திக்கு அப்பால் |
| கோசம் ............ | அன்னமய | பிராண, மனோ, விக்ஞான | ஆனந்தமய |
| உணர்வு ............ | Conscious | Conscience (Individualised) | Consciousness (Cosmic) |
| வழிபாடு ............ | துவைத | விஷிஷ்டா்த்வைத | அத்வைத |
| SAI | SERVICE | ADORATION | ILLUMINATION |
| ஆன்மீகப் பாதை... | கர்மயோகம் | பக்திமார்க்கம் | ஞானமார்க்கம் |
| | DOING | KNOWING | BEING |

(வடபிராந்திய ஆன்மீக இணைப்பாளர்)

Harikanan Printers, 424, K.K.S Road, Jaffna. T.P:021-2222717

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org